# முரசொலி

2 அணா

மு.கருணாநிதி

மலர் 1 | சென்னை | 3 — 12 — 54 | வெள்ளி | ஒலி 36


## குறளோவியம்



வெள்ளிப் பாற்குடத்தின் வாய்போன்ற வட்ட நிலா. அல்லிக்குளமோ என ஐயுறும் வண்ணம் நட்சத்திர வானம். அவைகளைப்பற்றி மெல்லும் தேனிசை மீட்டிவிட்டு, உலகத்தையே மறந்து அசை வற்று இருக்கின்றன அந்த நல்யாழ்கள் இரண்டும்— அந்த உயிர் யாழ்களின் கனவுலகத்தைக் கலைத்துவிடக் கூடாதேயென்ற பயத்தோடு, மென்காற்று—அவர்களை கீழ்ஸ்தாயியில் தாலாட்டுகிறது.

வானத்திலே உள்ள—விண்மீன்களோ, பெரிய தோர் குழப்பமான ஆராய்ச்சியில் இறங்கி, கலங்கித் திரிகின்றன. என்ன அந்த ஆராய்ச்சி!

தாங்கள் எங்கேயிருக்கிறோம்—நிலவு எங்கேயிருக் கிறது என்பது தான் அவைகளின் ஆராய்ச்சியாகும்.

வானத்திலே உள்ள கண்ணாடியில்தான் இவள் முகம் தெரிகிறதோ — அல்லது, பூமியில் உள்ள கண்ணாடியில் தான் நிலவு தெரிகிறதோ-என வியக்கும் அளவுக்கு நிலா முகம் படைத்த பேரழகி அவள்-ஆகவேதான்—அவளுக்கும், நிலவுக்கும் வேறு பாடு தெரியாமல் விண்மீன்கள் கலங்கித் திரிகின்றன. அதற்கு இதோ குறள் :—

**"மதியும் மடந்தை முகனும் அறியா பதியிற் கலங்கிய மீன்."**

இப்படி விண்மீன்களுக்கே கலக்கத்தை உண்டு பண்ணிய அந்தக் கட்டழகியின் தோளிலே ஒருவன் மெய்மறந்து சாய்ந்து கிடக்கிறான் என்பதைக் காணும் போது, இளம் உள்ளங்களில் பொறாமைச்கீறல் விழத் தான் செய்யும்-ஆனால் வள்ளுவர் உள்ளமோ, அறிவு மணக்கும் அழகான கேள்வியொன்றை எழுப்புகிறது- "அந்த உலகம்" என்று எந்த உலகத்தைப் பற்றியோ பிதற்றித் திரியும் சூதர்களுக்கு பதிலாக அமைகிறது அந்தக் கேள்வி.

**தான் விரும்பும் காதலியின் மெல்லிய தோளில் சாய்ந்திருந்து துயிலும் துயில் போல இனிமை வாய்ந்ததா, அந்த தாமரைக்கண்ணான் உலகம்?**

இல்லை—இல்லை!—

இதோ குறளோவியம் காணுங்கள் :-

**"தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது கொல் தாமரைக் கண்ணான் உலகு?"**

**— கருணா**

Best copy available

# சேட்டுகளோடு சேர்ந்து வாழவா?

இமய முதல் குமரிவரை இந்த நாடு எங்களுக்குத்தான் சொந்தம்—என்று காங்கிரஸ் கட்சி இறுமாந்திருந்த காலத்தில் உரிமை நாதம் கிளப்பினர்—வாய்ச் சவடால்காரர்கள் மீது வரிப்புலியென பாய்ந்தார், முகமதலி ஜின்னு! அந்த வீரன் பெற்றெடுத்த பாகிஸ்தான்—லியாகத் அலிகான் போன்ற விவேகிகள் வளர்த்த பாகிஸ்தான், இன்றைய தினம் கொந்தளிக்கும் கடல்போல காட்சி தருகிறது—பட்டாணிய மக்களது தனியாட்சி கோரி கராச்சியை மோதிடும் அலைகளின் வலிமை பெருகியபடியே இருக்கிறது. குறுகிய மனப்பான்மை கொண்ட நரிகள் கரைகளில் ஒதுங்கும் சின்னஞ் சிறு நண்டுகளுக்காக, நாக்கிலே நீர் பெருக்கெடுத்தோட காத்து நிற்கின்றன! சுதந்தர பூமியிலே சுபிட்சம் தேடி ஓடும் சில நல்லவர்களை விழுங்குவதற்கு மதவாதத் திமிங்கலங்கள் வாய் பிளந்தபடி ஓலமிடுகின்றன! இந்த நிலையிலே அமெரிக்காவின் ஏகாதிபத்திய பெரும் புயலொன்று வீசி பாகிஸ்தான் மக்களை ஆட்டிப் படைக்கிறது.

ஆண்டுகள் பல உருண்டோடிய பின்னரும் அவர்கள் தங்களுக்கென ஒரு அரசியல் அமைப்பை வகுத்துக் கொண்டார்களில்லை. தனக்கென சொந்த வீடு ஒன்றை அமைத்துக் கொண்டு வாழ வசதி இருந்தும் — சந்தைக்கடையருகிலே இருக்கும் வாடகைக் குடிசையிலே பிச்சைக் கேட்டு அலையும் வகைகெட்டவனைப்போல, ஆங்கிலேயன் தயாரித்துக் கொடுத்த அரசியலமைப்பின் நிழலிலே இன்றுவரை பாகிஸ்தான் வாழ்ந்து வருகிறது இறகு முளைத்த பின்னரும் கூட்டிலே உழலும் கிளியைத்தான் உதாரணமாகச் சொல்ல வேண்டும்; அரசியல் நிர்ணய சபையைக் கலைத்துவிட்ட பாகிஸ்தான் துரைத்தனத்துக்கு!

அமெரிக்காவின் அந்தரங்க நண்பராம் பிரதமர் முகமதலியின் சென்ற வாரத்து பிரகடனம் அரசியல் வட்டாரத்துக்கே அதிர்ச்சி தருவதாய் அமைந்திருக்கிறது. அவர்களது புதிய திட்டத்தின்படி இனி, மேற்கு பாகிஸ்தான் ஒரே உறுப்பாக விளங்குமாம்; மாகாணங்கள் என்ற பெயரில் இதுவரை அதிலிருந்த உட்பிரிவுகள் அனைத்தும் மறைந்து விடுமாம்; அதன்படி கிழக்கு வங்கம் இனி "கிழக்கு பாகிஸ்தான்' என்று அழைக்கப்படும்; மேற்கு பாகிஸ்தானிலுள்ள மாகாணங்களான சிந்து, மேற்கு பஞ்சாப், எல்லைப்புற மாகாணம் இவைகளை யெல்லாம் ஒரே அமைப்பாக்கி, எல்லாப் பிரதேசங்களும் 'மேற்கு பாகிஸ்தான்' என்ற ஒரே பெயரிலேயே அழைக்கப்பட இருக்கிறது! அதாவது, கூட்டாட்சிமுறை திருத்தி அமைக்கப் பட்டு, மத்திய அரசாங்கம் பலப்படுத்தப் படுகிறது!

பரந்த உபகண்டத்திலிருந்து பாகிஸ்தானைப் பிரித்தவர்கள், மாகாணத்தின் எல்லைக்கோடுகளையெல்லாம் அழித்ததோடல்லாமல் அந்தமாகாணத்தவரின் வேதனைக் குரலையும் அடக்குவதற்கு அதைவிட அதிகமான சுருதியில் இப்போது "ஒற்றுமை கீதம்" பாடுகிறார்கள்.

பாகிஸ்தானின் உள்நாட்டு நடவடிக்கைகளைப் பற்றியல்ல நாம் இப்போது விமர்சிக்க நினைப்பது. பாகிஸ்தானில் கொழுந்து விட்டெரியும் பிரிவினை சக்திகளைப் பற்றி, நம் நாட்டு பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்தான் நம்முடைய சிந்தையனைத்தையும் கவர்கிறது.

"விசித்திர ஜனநாயகம்"-என்கிற தலைப்பில் நவம்பர்—23ந் தேதியன்று சுதேசமித்திரன் தீட்டிய தலையங்கத்தை கீழே தருகிறோம்:

"கிழக்கு வங்கத்துக்கும், மேற்கு பாகிஸ்தானுக்கும் மதம் ஒன்றைத் தவிர மற்றபடி கலாச்சாரத்திலோ பாஷையிலோ நெருங்கிய தொடர்பு கிடையாது. பொருளாதார வகையிலும் பாகிஸ்தானின் இரு பகுதிகளுக்கும் மிக்க வித்தியாசமுண்டு. உண்மையில் அடிப்படையான விஷயங்களில் இரண்டும் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் வெவ்வேறானவை!"

ஒரே மதமென்னும் பந்தத்தைத் தவிர கீழ்வங்கத்துக்கும் மேற்கு பாகிஸ்தானுக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாதாம்; கலாச்சாரத்துறையிலும், மொழி அடிப்படையிலும்கூட அவை ஒன்றி வாழ முடியாத இரு துருவங்களாம்!

"சுதேசமித்திரன்" மட்டுமா? "இந்து"வும் இதேபாணியிலே தான் நவம்பர் 24-ந்தேதி "கட்டாய இணைப்பு" என்கிற தலைப்பில் தலையங்கம் தீட்டியிருக்கிறது:

"கலாச்சாரப் படியும், பூகோள ரீதிப்படியும், இனவழிப்படியும் மேற்கு பாகிஸ்தான் ஒரே அங்கம் என்பது மறுப்புக்குரிய விஷயம். எல்லைப்புற மாநிலத்து பட்டாணியனுக்கும் பஞ்சாபிக்கும், அதே பஞ்சாபிக்கும் சிந்திக்காரனுக்கும் எந்தவித ஒற்றுமையும் கிடையாது"

'இந்து'வாா் விளக்கமுற தீட்டிவிட்டார்- பலுசிஸ்தான மக்கள், சிந்துமக்கள் மற்றும் பட்டாணியர், பஞ்சாபிகள் இவர்களெல்லாம் தனித்தனி கலாசாரத்துக்குப் பாத்திரமானவர்கள், என்று! இந்துவும், மித்திரனும் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள அத்தனை தேசிய ஏடுகளும் பாகிஸ்தானின் மாகாணக் கோடுகள் கலைக்கப் படுவதை வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. பாவம்; அடுத்த வீட்டுக்காரன் தன் மனைவியை நையப் புடைப்பது பற்றி கண்டனக் குரலெழுப்பும் கனவான்கள் சொந்த வீட்டு விவகாரத்தை ஏனோ மறந்து விட்டனர்!

இங்கும்தான் நாம் ஆண்டாண்டு காலமாக கூக்குரலிட்டு வருகிறோம். "தென்னகத்து மக்கள் புலி நிகர் மாந்தர். விண்ணகமே இடிந்து விழும்படி தனி அரசு கோரும் மூவேந்தரின் வாரிசு" இப்படி வரலாற்று குறிப்புகளை எடுத்து நீட்டினோம்.

மண்ணுக்கும் மூத்த மொழி பேசும் திராவிடர். கண்ணிலே செலுத்திடும் காய்ச்சியமழுவாம் இந்தி மொழியின் ஆதிக்கத்தின் கீழ் எப்படி வாழ்ந்திட முடியும் என்று, மொழியையும் ஒரு காரணமாகக் காட்டினோம்.

முழங்கால் அளவு அரும்பி விட்ட நெடுந்தாடிப் பஞ்சாபிக்காரனும், குருத்துவிடும் மீசை அமைப்பிலேகருத்துக்கொண்ட தென்னவனும் ஒரே இனமாக முடியுமா? பதினாறு முழத்தை தலைப்பாகையாக உடுக்கும் காபூல்காரனும், நான்கு முழம் துண்டை நாசுக்காகதோளிலே அணிந்து கொள்ளும் திராவிடனும் சகோதரர்களாக இருக்க முடியுமா?—இப்படியும் கேட்டோம்; எங்கள் கலாச்சாரம் வேறு என்று எடுத்துக் காட்டினோம். திராவிடத்தின் பிரிவினைக்கு ஆணிவேர் விட்ட ஆதாரங்களை அள்ளி வீசினோம். அப்போதெல்லாம் கேளாக் காதினர் போல பாசாங்கு செய்த சுதேசமித்திரன்தான் இப்போது எழுதுகின்றது, "கலாச்சாரத்திலோ, பாஷையிலோ நெருங்கிய தொடர்பில்லாத" கிழக்கு வங்கமும், மேற்கு பாகிஸ்தானும் இணைந்து வாழ முடியாதென்று!

கிழக்கு வங்கமும், மேற்கு பாகிஸ்தானும், பெரும்பாலான மக்கள் முஸ்லிம்களாக இருந்தபோதும் கூட, சேர்ந்து வாழ முடியாதாம். ஆனால் ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் டெல்லியும் சென்னையும் சேர்ந்து வாழலாமாம்!

"பொருளாதார வகையிலே பாகிஸ்தானின் இருபகுதிகளுக்கும் மிக்க வித்தியாசமுண்டு; ஆகவே அவைகள் ஒன்றாக இருக்கமுடியாது;" என்று அழுத்தந்திருத்தமாக எழுதிடும் மித்திரனின் பேனாமுள் பம்பாய்க்கும், சென்னைக்கு முள்ள பொருளாதார ஏற்றதாழ்வைப் பற்றி என்றாவது வாய்திறந்த துண்டா?

அவைகள் வாய்திறக்கும் காலமொன்று ஓடிவரத்தான் போகிறது. பரந்து விரிந்த சீனாவிலே, சர்வாதிகாரப் பந்தாடிக் கிடந்த சியாங்கேஷேக், பார்மோசாவிலே பதுங்கி விட வில்லையா? உரிமைக்குரலும் விடுதலைப் படையும் வெற்றி கண்டதில்லை என்பதைவரலாறு தான் ஏற்றுக் கொண்டதுண்டா?

★

## டாக்டர்—பணக்காரருக்கு!

★

நியூயார்க் நகரத்திலுள்ள ஒரு ஆசிரியர் மன நோய் வைத்தியர் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்றார். அவர் பார்க்கச் சென்ற டாக்டரின் ஆஸ்பத்திரி ஒரு பிரம்மாண்டமான மாளிகையாக இருந்தது. உள்ளே நுழைந்ததும் அவரை வரவேற்பதற்குக்கூட ஆள் இல்லை. இரண்டு போர்டுகள் தொங்கின. அதில் ஒன்றில் 'ஆண்கள்' என்றும், மற்றொன்றில் 'பெண்கள்' என்றும் எழுதியிருந்தன. ஆசிரியர் 'ஆண்கள்' என்றிருந்த அறையில் நுழைந்தார். அங்கே மறுபடியும் இரண்டு போர்டுகள் தொங்கின. அவைகளில் "மன நோய்" என்றும், "இதர நோய்கள்" என்றும் எழுதியிருந்தன. வந்தவர் "மன நோய்" என்றிருந்த அறையில் நுழைந்தார். அங்கேயும் இரண்டு போர்டுகள் தொங்கின. "பத்தாயிரம் டாலருக்கு மேல் சம்பாதிப்பவர்கள்" — "அதற்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்கள்" என்று அவைகளில் எழுதியிருந்தன. ஏழை ஆசிரியர் இரண்டாவது 'போர்டு' தொங்கும் அறையில் நுழைந்தார். என்ன விந்தை! அந்த போர்டு காட்டிய பாதை, திரும்பவும் அவரை ஆஸ்பத்திரிக்கு வெளியே கொண்டு வந்து விட்டது!

— அட்லாண்டா ஜர்னல்

★

# தலையங்கம்

சென்னை [ 3—12—54 ] வெள்ளி

## அதிசயப் பிறவிகள்!

"இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் இன்னமும், ஐரோப்பாவில் 80 அல்லது 90 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட புத்தகங்களில் காணப்படும் கருத்துக்களிலேயே உழன்று கொண்டிருக்கிறார்கள்"

என்பதாகப் பண்டித நேரு அவர்கள், நவம்பவர் 28-ம் நாள் புது டில்லியிலே முழங்கியிருக்கிறார்.

"ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு சூழ்நிலையில், ஏதோ சில நாடுகளின் நிலைமையை மனதில் வைத்துக் கொண்டு, எழுதப்பட்ட புத்தகங்களை இந்தியா, இக்காலத்தில் தனது வேதமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் மனப்பான்மை உண்மையில் பிற்போக்குமனப்பான்மை என்பதை நேரு விளக்கியுள்ளார்"

இதுபோல நவ. 30 சென்னை—தினமணி, தலையங்கமும் தீட்டியிருக்கிறது, நேருவின் பிரசங்கத்தை அடியோடு ஆதரித்து!—

ஏறத்தாழ நூறு ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட புத்தகம் இப்போது ஒத்துவருமா? அதன்படி நடக்கவேண்டுமென்பது அறிவுடைமையாகுமா? இப்படி நேரு கேட்கிறார்-கம்யூனிச தத்துவங்களைத் தாங்கியிருக்கிற ஏடுகள், என்றும் இளமையோடு நின்று, சிறுமாற்றத்தோடும் இயங்கத் தேவையில்லாத "சிரஞ்சீவிவரம்" பெற்றவை என்று நாமும் கூறத் தயாராயில்லை—நேருவின் வாசகத்தை முழுவதுமே ஒப்புக் கொள்ள முடியாவிட்டாலும், நூறு ஆண்டுகட்கு முன்பு—அன்றைய நிலையை வைத்து எழுதப்பட்ட நூல்களை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவது சாலச் சிறந்தது என்கிற "பரந்த கண்ணோட்டமோ"—"யதார்த்த ஞானம்" என்பார்களே; அதுவோ; நமக்குக் கிடையாது—

அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே நேருவின் கருத்தையும், தினமணி தலையங்கத்தையும் ஆராய்ந்தால், ஏறத்தாழ நமக்கும் அவர்களுக்கும்—இந்த ஒரு விஷயத்தைப் பொருத்த வரையில் அதிக வித்யாசமில்லை என்றேகூறலாம்—ஆனால், நேருவும், தினமணியும்—மற்ற தேசீய ஏடுகளும், பொதுவுடைமைத் தத்துவத்தின் பகிரங்க எதிரிகளாக அமர்ந்து கொண்டு, மேற்கண்ட கருத்துக்களை வெளியிடுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடவில்லை.

"நூறு வருடத்துக்கு முன் எழுதியது இன்று வேதமாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமோம்!"

கிண்டல் செய்கிறது தினமணி—நேருவும் இதையே பேசியிருக்கிறார்.

நூறு வருடத்துக்கு முன் எழுதிய நூலே இன்று ஒத்துவராது என்றால், போன யுகத்திலே எழுதப்பட்டவை என்று சொல்லப்படும் நூல்களும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட ராமாயண பாரதங்களும் இந்தியாவின் வழிகாட்டிகளாக எப்படி அமைய முடியும் என்பதை நேரு அவர்களும், அவர் தம் சீடகோடிகளும் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களா என்றே கேட்கிறோம்.

இருபதுவயதாகிற வாலிபன்—அவன் தனது பத்தோன்பதாவது வயதிலே தைக்கப்பட்ட சோக்காயை அணிந்து கொள்கிறான்—ஏறத்தாழ சரியாக இருக்கிறது—ஆனால் துணி கந்தலாகவும், கிழிசல்கள் ஏற்பட்டும் இருக்கிறது — அதை சரிபார்த்து, தைத்து, வெளுத்து போட்டுக் கொள்ளலாம் — ஆனால், அந்த சோக்காயைப் பிடிக்காத அடுத்த வீட்டுக்காரன் "அய்யய்யோ! இது போன வருஷத்துப் பழசு அல்லவா!" என்றுபரிகாசம்செய்கிறான்.பரிகாசம்செய்துவிட்டு அவன்போய் விட்டாலும் 'அவன் பணக்காரன், பளபளப்புகுறையாது உடுத்துகிறவன் போலும்!' என்று எண்ணிக்கொண்டு வாளாயிருக்கலாம். ஆனால் அவனே; போனவருஷம் தைத்த சோக்காயை இகழ்ந்துவிட்டு, அவன் குழந்தையாயிருக்கும் போது, தைத்த கால் உரையை இப்போது போட்டுக் கொண்டு அரை நிர்வாணமாக வீதியிலே நடந்துபோகிறான்—அவன் பணக்காரனுமல்ல; பைத்தியக்காரன் என்ற முடிவுக்கே வர வேண்டி யிருக்கிறது நாம்!

போனவருஷம் தைத்த சோக்காயைப் போட்டுக் கொள்வது அநாகரீகம்—குழந்தையில் தைத்த கால் உரையை மாட்டிக்கொள்—அதுவே நாகரீகம் என்று கூறும் மனிதனுக்கும், பத்தொன்பதாவது நூற்றாண்டு புத்தகம் இருபதாம் நூற்றாண்டுக்கு செல்லாது — ஆனால் நாலாயிரம் ஐயாயிரம் வருடத்துக்கு முன்பு எழுதப்பட்ட வேத புராண இதிகாசங்கள் இந்தியாவின் ஜோதி மயமான வழிகாட்டிகள் என்று கூறுகிற பண்டித நேருவுக்கும் "பிரதமர்" என்கிற ஒரு பட்டத்தை தவிர வேறென்ன வித்தியாசமிருக்கிறது என்று நாம் கேட்கிறோம் — நாடு கேட்கிறது!

இன்றைக்கும் ஆயிரம் காலத்துக் கதையான ராமாயணத்தை நம்பி, ராமலீலா, உற்சவத்தை வட நாட்டிலே நடத்தி, ராவணன் பொம்மையைக் கொளுத்துகிற விழாவை நேரு வேடிக்கை பார்க்கிறார்—அனுமதிக்கிறார்.

ஆயிரமாயிரம்பேர் மிதியுண்டு சாகிற, கும்பமேளா எனும் சாக்கடைத்திரு விழாவை அவர் ஆட்சி தடுத்தது கிடையாது—கண்டித்தது கிடையாது!—கம்யூனிசம் என்பதுமட்டும் சென்ற நூற்றாண்டுக் கொள்கையாம்—அந்தப்பழைய கொள்கை இப்போது தேவையில்லையாம்—போன வருஷம் தைத்த சட்டையை, இந்த வருஷம் சரி பார்த்து, கிழிசல்களை மூட்டி, அணிந்து கொள்ளக் கூடாதாம் — ஆறுமாதக் குழந்தையிலே தைத்த அரை நிஜாரை அறுபது வயதிலும் போட்டுக் கொண்டு, அவலக்ஷண கோலத்திலே நிற்கலாமாம் — இது நேருவின் தத்துவம் — கோயங்கா ஏட்டின் சித்தாந்தம்—குள்ள நரி இதழ்களின் கூக்குரல்—சரியா? முறையா? சிந்தித்தீர்களா என்று நாம் கேட்டால்—துப்பாக்கி வேட்டால்—பதில் சொல்கிறார்கள்!—அதிசயமான பிறவிகள்!

★

## தப்பித்து வந்தவர் தரும் உண்மை!

★

*"இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, மற்றச் சிறு அரசியல் குழுக்களுடன் ஒரு ஒத்த ஏற்பாட்டுடனும், மாசற்ற மனப் போக்குடனும் என்றும் ஒன்றுபட்டு இயங்காது என்ற கசப்பான படிப்பினையை நான் கற்றுக்கொண்டேன். அக்கட்சி, சொந்தத்தில் தனக்குள்ள பலக் குறைவை உள்ளூர உணர்ந்திருக்கிற காரணத்தினால், அதனிடத்தில் அச்சமும் ஆத்திரமும் குடிகொண்டு இருக்கின்றன"*

*'1948-ல், கல்கத்தா மாநாட்டில், கம்யூனிஸ்டுகள், மா-சே-துங்கை, புரட்சியின் விரோதி' என்று கூறியதுபோல நாங்கள் கூறவில்லை; பின்னர் 1949-ல், 'சீனாவின் விடுதலைவீரன் மா-சே-துங்தான்,' என்றுகூறி, 1948ல் கூறியதற்கு மன்னிப்புக் கோரியதும் கிடையாது."*

*"காளிதாசனை, 'பிரபுக்களின் புலவர்' என்று நாங்கள் கூறியதும் இல்லை — கம்யூனிஸ்டுகளைப் போல; பின்னர், ரஷ்யா, காளிதாசனின் கவிதைகளை தனது மொழியில் மொழிபெயர்ப்பதாக அறிவித்ததும், 'காளிதாசன் ஒரு முற்போக்குக் கவிஞன்,' என்றும் கூறியதில்லை."*

— என். எம். ஜெயசூரியா

ஐதராபாத் கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணியிலிருந்து விலகியவர்.

அடுத்த வாரம் முதல்
கருணாநிதி எழுதும் சிறு கதைகள்
தொடர்ந்து வெளிவரும்.

One side of the page is dark



# உலகம் எழுதிய ஒரு மாத டைரி


புத்தாண்டும் பிறக்கப் போகிறதே; இப்போதே பழக்கப் படுத்திக் கொண்டால்தானே இனியாவது தொடர்ந்தாற்போல் எழுதலாம்—என்று நினைத்த படியே டயரியைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன், நினைத்த உடனேயே என் நெஞ்சு இனித்தது- ஆமாம்; இந்த மாதத்தில் முதன் முதலாக நல்ல சேதி யொன்றைப் பற்றி எழுதப் போகிறேன்.

"நான் செத்துப்போய் என் சவம் அழுகி விட்டால்கூட அதையும் இங்குதான் புதைக்க வேண்டு' மென்று கூக்குரலிட்டதே பிரெஞ்சு ஏகாதிபத்தியம்—அது மூட்டை முடிச்சுடன் கப்பலேறி விட்டது. என்ன அதிசயம்! இந்த இன்பத் திருவிழாவைக் கொண்டாட ஒரு மந்திரி கூட புதுச்சேரிக்கு வரவில்லை. பிரியாணிக் கடையைத் திறந்து வைக்க - பரமேஸ்வரனைத் தொழுது, தெரிசிக்க—ஆக கள்ளச் சாராயம் தயாராகும் தொழிற் சாலையைத் தவிர மற்ற சந்து பொந்துகளுக்கெல்லாம் காலிலே சக்கரம் கட்டிக் கொண்டு விஜயம் செய்யும் மந்திரிமார்கள் மருந்துக்குக்கூட அங்கே காணோம்— நம்முடைய பிரதமரே சீனாவுக்கு விருந்து சாப்பிடப் போய் விட்டார்.

உம்...அவர் எங்கெங்கு போனால் எனக்கென்ன வந்தது; ஏதோ, உலகப்பன் குழந்தைகள் ஒற்றுமையாய் இருந்தால் அதுவே எனக்கு அனந்தகோடி மகிழ்ச்சி!

★ ★ ★

அந்த மகிழ்ச்சியிலே மண்ணை அள்ளிப் போடப் பார்க்கிறார் ஒரு மகானுபாவர், அவர் யாரென்று நினைக்கிறீர்கள்? வேறு யாருமில்லை; புதுப்புது சரடுகள் விட்டு என்னை எப்போதும் சஞ்சலத்தில் ஆழ்த்திக் கொண்டிருப்பாரே; அந்த சர்ச்சில் துரைதான்! அவர் எத்தனை தடவைகள்தான் ரஷ்யாவுக்குச் செல்லப் போவதாகவும், அங்கே மாலெங்கோவுடன் சேர்ந்து கொண்டு சமாதானப் புருவின் சிறகுகளைத் தடவிக் கொடுக்கப் போவதாகவும் சொல்லி என்னை சந்தோஷப் படுத்தியிருக்கிறார்! அவருடைய இருதயத்துக்குள்ளே இத்தனை நாளும் புகைந்து கொண்டிருந்த எரிமலைதான் இப்போது அவரது சுருட்டுப் புகையையும் முந்திக் கொண்டு வெளிக்கிளம்பிவிட்டது. அவர் சொல்லுகிறார் சென்ற உலக யுத்தத்தின்போது சரணடைந்த ஜெர்மனியின் ஆயுதங்களைப்பயன் படுத்திக்கொண்டு; ரஷ்யா மீண்டும் முன்னேறினால் அதன் மீது பாய்வதற்குத் தயாராயிருந்தாராம். அதற்கு உண்டான ஆயத்தங்களைச் செய்வதற்கு தளபதி மாண்ட் கோமரிக்குக் கூட உத்தரவு அனுப்பி யிருந்தாராம்!



என்னத்தைச் சொல்வது! ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து பின்னர் மனிதனையும் கடிக்கும் 'சிலது' களைப் போல, பாசிஸ்டுகளையும், நாஜிகளையும் நசுக்கிவிட்டு கடைசியில் சேர்ந்து போரிட்ட நண்பன் மீதே போர்தொடுக்க தயாராயிருந்தாராம் இந்த துரை!

இந்த விபரீதத் திட்டத்தைக் கேள்விப்பட்டதும், மணிக்கு ஆயிரக் கணக்கான மைல் வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் நான்கூட சற்று திகைத்து நின்றுவிட்டேன் இட்லரைப் போய் போர் வெறி பிடித்தவன் என்று திட்டுகிறார்களே, சர்ச்சிலின் இந்த வெறியை என்னவென்று பெயர் சொல்லி அழைப்பது?

★ ★ ★

"அழைப்பதற்குப் பெயர் கிடைக்காமல் தானே நாங்கள் அகராதியைப் புரட்டிக்கொண்டிருக்கிறோம்"-என்று என்பேனா என்னைக் கேட்காமலே ஏதோ கிறுக்கித் தள்ளியது. ஆமாம்! எகிப்து நாட்டில் நடப்பதைத்தான் சொல்லுகிறேன். ஜெனரல் நகிபை புரட்சியின் பிதா, மறுமலர்ச்சியின் மாதா—என்றெல்லாம் சொல்லி புகழ்ந்தார்கள். ஆனால் அவரோ இப்போது பதவியிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார். ஜெனரல் நாசர்தான் இப்போது ஆல்—இன்—ஆல்! நல்ல வேளையாக நகிப் மீது விசாரணை ஒன்றும் கிடையாதாம்.

★ ★ ★

"நாட்டுக்கு துரோகம்செய்ததாக நம்பப்படும் நகிப்மீதே விசாரணை கிடையாதாம்; ஆனால் ஏதோ சில ஜீவன்களை சுட்டுக் கொன்றதற்காக விசாரணைக் குழுவொன்றை நியமிக்கும்படி என்னைக் கட்டாயப் படுத்தி விட்டாரே, இந்த லோகியோ" என்ற குரல் வந்த பக்கம் என் கவனத்தைத் திருப்பினேன். பட்டம் தாணுப் பிள்ளை நேந்திரங்காய் வறுவலைத்தின்றபடி என்னைக் கை தட்டிக் கூப்பிட்டார்.

"இதோ பார்த்தாயா எங்கள் நாகபுரி மாநாட்டின் தீர்மானத்தை! பதவி நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் என்னைக் காலை வாரிவிட கங்கணம் கட்டி நின்ற லோகியோ இப்போது பொட்டிப் பாம்பாகி விட்டார்—காங்கிரசின் இரத்தம் எங்கள் கட்சியில் ஓடும் வரை என்னை ராஜிநாமா செய்யச் சொல்ல யாருக்குத்தான் தைரியம் வரும்?"—என்று ஒரு கனைப்பு கனைத்தார்.

அவர் சொல்வதும் எனக்கு நியாயமாகத்தான் தெரிந்தது! பட்டம் சர்க்கார் விலக வேண்டுமென்று லோகியோ 'கோஷ' மிட்டதும், அதற்கு மற்ற தலைவர்களெல்லாம் வாய் மூடிமௌனிகளாய் இருந்ததும், பின்னர் பெயருக்குஒருவிசாரணைக் கமிட்டி வைத்து முடிவு தெரிவித்ததும், அதற்கப்பால் லோகியோ பட்டத்தின்ராஜி நாமாவை நிர்ப்பந்தம் செய்யாமல் அடங்கி விட்டதும், சோஷலிஸ்ட் கட்சியிலும் சில வீரதீரப் புலிகள்உண்டு என்பதை காட்டிக் கொள்வதற்காக முன் கூட்டியே ஏற்பாடு செய்த ஒரு 'ஷோ'தானே! நாடகம் முடிந்து விட்டது; இனிமேல் அவர்கள் நல்லவர்கள் போல இருக்கலாமல்லவா?

★ ★ ★

"அவர்கள் நாடகம்தான், தோஹரே முடிவு பெற்றது. என்னுடைய 'ஷோ' இப்போது தான் ஆரம்பமாகிறது" என்று சொல்லிக் கொண்டே என் தோளைப் பிடித்துக் குலுக்கினார் நேரு. செய்தி என்னவென்று கேட்டேன்—செய்தித்தாளை என் முன்னே தூக்கி எறிந்தார் அவர்!

என்ன விந்தை! காந்திஜி, தாண்டன் போன்ற மகான் 'ஜி'கள் வீற்றிருந்த காங்கிரஸ் கமிட்டியின் ராஷ்டிரபதி நாற்காலியிலே ஒரு வாலிபர் உட்கார்ந்திருந்தார். அவர் பெயர்தான் தீபர்! சௌராஷ்டிரத்தைத் தவிர வெளி மாகாணங்களுக்கெல்லாம் விளம்பரமாகாத அந்த வாலிபரை காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக்கிய ரகசியம் எனக்கு விளங்க வில்லை, அன்றைய தினம் நேரு தன் டயரியிலே என்ன எழுதியிருப்பார் என்பதைப் பார்த்து விட வேண்டுமென்று முடிவு செய்தேன்; தன்னுடைய நாட் குறிப்பிலே





நேரு நிச்சயம் இப்படித்தான் எழுதியிருக்க வேண்டும்.

"ஓய்வு பெற வேண்டுமென்று இடி முழக்கம் செய்த நான் நாட்டு மக்களெல்லாம்நினைக்கிறபடி பொது வாழ்விற்கு முழுக்குப் போட்டு விட்டு ஓடிவிடுவேனா, என்ன? சர்வாதிகார மனப்பண்பை நான் வளர்த்து வருவதாக சிலர் ஓலமிடுகிறார்களே அவர்களை எப்படி அடக்குவது என்பதற்கு, சீனவிஜயத்தின் போது எனக்குக் கிடைத்த ஓய்வு நல்ல பலன் தந்தது. இளைஞரான தீபர் நல்லவர்; நாலு பேருக்குஅறிமுகமாகாதவர். நான் விலகுவதுபோல் விலகி ராஷ்டிரபதி ஸ்தானத்துக்கு தீபரைக் கொண்டு வந்து அமர்த்தினால், திரைக்குப் பின்னிருந்து கொண்டு நான் அவரை என்னிச்சைப் படி ஆட்டி வைக்கலாமல்லவா?" நேருவின் டயரியைப் படித்த பின்னர்தான் என் சந்தேகம் நிவர்த்தியாகியது.

★ ★ ★

சரி; சரி. அரசியலைப்பற்றியே எழுதித் தள்ளி விட்டேனே. இதோ ஆத்மார்த்தத் துறையைப் பற்றி எழுதுகிறேன்.

நவம்பர் 19-ம் தேதியன்று நாகபுரியிலே "ஓம்" சின்னத்தோடு ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. ஏராளமான மக்கள் அதை தரிசித்தபடி இருக்கின்றனர்.

ஐ. நா. சபையில் இதுமாதிரி தெய்வாம்சப் பிறவிகளைப் பற்றிப் பேசாமல், ஏதோ சத்தற்ற லோக விவகாரங்களைப் பற்றிப் பேசி மண்டையை உடைத்துக் கொள்கிறார்களே! ஐயோ, பாவம்! இந்த மேல் நாட்டுக்காரர்களுக்கு மூளையே கிடையாது.



**பொதுக்கூட்டம்**

5-12-1954 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு சென்னை முத்தியாலுபேட்டை சாலைவிநாயகர் கோயில் தெருவில், டி. வி. நாராயணசாமி அவர்கள் தலைமையில்.

மு. கருணாநிதி
எஸ். எஸ். ராஜேந்திரன்
மற்றும் பலர் பேசுவார்கள்

**முத்தமிழ் மன்றம்**
சென்னை—1

# தோற்ருர்கள்! தோற்ருர்கள்! இன்னும் தொடர்கிருர்கள்!!

'கட்சிசார்பற்றது காங்கிரஸ் சர்க்கார்' என்று சொல்லிக் கொண்டு 'நாலாயிரம் தொகுதிக்கும் நானே அபேட்சகன்' என்று சொன்னர் பண்டித நேரு சென்ற பொதுத் தேர்தல் காலத்தில். அப்போதே கண்டித்தோம் கவனிப்பாரில்லை! தேர்தல் 'சீசன்'! யார் யாரையோ தேடி அலையும் நேரம் அது! அதன் பின் நாம் மறந்து விட்டதாக எண்ணி அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

பிறகு காங்கிரஸ் சர்க்கார் மத சார்பற்ற சர்க்கார் என்ற பறை சாற்றினர்கள்! அந்த ஒலி அலைகள் அடங்கு முன்பாகவே ஐந்து லட்சரூபாய் செலவில் சோமநாதபுர ஆலயத்தை 'பிரதிஷ்டை' செய்தார் ராஜேந்திரர் பார்ப்பனர்களின் பாதம் கழுவிகாணிக்கை செலுத்தினர். அப்போதும் நாம்கண்டிக்க தவறவில்லை "ஏனய்ய ஆளவந்தாரே; எத்தனை நாளைக்கு இந்த மூடு மந்திரம்?" என்று கோபமாகத்தான் கேட்டோம். உடனே மத சார்பற்ற சர்க்கார் என்பதற்கு புதுவிளக்கம் தந்தார்கள்-"எந்த மதத்திற்கும் இந்த அரசு தடைவிதிக்காது—இதுதான் மதசார்பற்ற சர்க்கார் — என்பதின் பொருள்" என்ருர்கள்.

"அப்படியானல் நீவிர் இந்து மதத்தின் சார்பானவரில்லையோ?"

"இல்லை! இல்லை!!"

"பிறகு ஏன் சட்டசபை கட்டிடங்களின் முகப்புவாயிலில் இந்துக் கோயிலின் சின்னம்? வடகலை தென்கலை தகராறுக்கு நீதி மன்றங்களில் அனுமதி ஏன்?"—கேட்டோம் நாம். சர்க்கார் மாளிகைகளிலிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. இப்போது மீண்டும் மதத்திற்கு சார்பாக வாதாட வந்திருக்கிருர்கள் ஆளவந்திருக்கிறவர்கள்.

எப்போதும் எந்த நாடகத்தையும் தடைவிதிக்க சர்க்காருக்கு அதிகாரம் உண்டாம்! இதுகாறும் அமுலில் இருந்து வந்த சட்டம் சரியாக இல்லையாம்! எண்பதாண்டுகளுக்கு முன்பு தயாரித்ததாம்! அதற்காக சென்னை சர்க்கார் புதிதாக ஒரு மசோதா தயாரித்திருக்கிருர்களாம்! அதன்படி நாடகத்தை தடைவிதிக்க, கதைகளைப் படித்துப் பார்க்க, கண்டிக்க, சர்க்காருக்கு அதிகாரமுண்டாம்! மசோதா சொல்லுகிறது—மிரட்டுகிறது!

பொது மேடை, புரட்சி இலக்கியம், புத்துணர்ச்சி யூட்டும்நாடகம் இவை மூன்றையும் நினைக்கும் போது, நாட்டவர் நெஞ்சங்களின் முன் நிற்பது நாம்தான் திராவிட இயக்கத்தார்தான். நமது நாடகமென்ருல் ஒரு தனி வசூல்! நமது புத்தகங்கள் என்ருல் ஏராளமான விற்பனை! பொதுக் கூட்டமா? மேடைக்கு முன்னே ஜன சமுத்திரம்! இந்த அமோக ஆதரவு ஆட்சி பீடத்தின் அச்சாணிகளாய் உள்ளவர்களுக்கே அதிர்ச்சியைத் தந்திருக்கிறது—ஒருமுறையல்ல—பலமுறை!

முதலிலே புத்தகங்களை தடைவிதித்துப் பார்த்தார்கள்—பத்திரிகைகளுக்கு ஜாமீன் தொகை கட்டச் சொன்னர்கள். கட்டளைக்குச் சிரம் பணிந்தோம்—பணம் கட்டினேம் — ஆனல் சட்டப் புத்தகத்தை வீசியெறிந்தோம்—நீதிபதி பெருமூச்சு விட்டார்! ஆம் — ஒருவழக்கில் கூட சர்க்கார் வெற்றி பெற முடியவில்லை.

ஆரியமாயை! — வழக்கு வாபஸ்!

இலட்சியவரலாறு —
வழக்கு வாபஸ்!

ஜாமீன்தொகை-வழக்கு வாபஸ்!

இப்படித்தான் சர்க்காரின் தோல்விக் காதை தொடர்ந்து கொண்டு போனதேயன்றி — ஜெயித்ததில்லை! ஜெயித்ததில்லை!! நம்மை ஜெயித்ததே இல்லை!!!

ஆனல் இப்போது நாடகத்தில் கைவைக்கத் துணிந்திருக்கிருர்கள்.

நாடகம், நாட்டு நிலைமையின் சிறிய கோர்வை! சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணுடி! கண்ணுடியால், விகார முகத்தினை வைபத்துப் பேரழகியாகவும் காட்டமுடியாது, கட்டவிழா கன்னிபை, மொட்டவிழ்ந்து பலரால் நுகரப்பட்டு கருகிய மலர் என்றும் காட்ட முடியாது. நாடகத்தை தடைவிதிக்க விரும்புவோர் முதலிலே கண்ணுடியின் சக்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும், நாடகத்தைத் தடுத்து விடுவதால் சமுதாயத்தின் கோணல்கள் நிவர்த்திக்கப்பட்டு விடப் போகிறதில்லை. எந்தெந்த கருத்துக் கொண்ட நாடகங்களை தடை விதிக்க எண்ணப் படுகிறதோ முதலில் அந்தத் தீய கருத்துக்கள் சமுதாயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும் — நாடாளும் நல்லவர்கள் முதலிலே அதைச் செய்ய வேண்டும — அழுகும் படி குழந்தையைக் கிள்ளி விட்டு 'ஆராரோ' பாடி விட்டால் போதும் என்ற எண்ணத்தில், உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துக் கொள்ளலாம் என்று நாடகக்காரர்களுக்கு சலுகை காட்டியும் பயனில்லை.

★

# பஜனைக் கச்சேரி செய்வதா பொதுவுடமை?

★

## சாக்கடையிலே சந்தன மணமாம்! பூக்கடையிலே புலால் நாற்றமாம்!

★

சோவியத் நாட்டின் புதிய கலைக்களஞ்சியம் இப்போது ரஷ்ய பூமியெங்குமுள்ள பள்ளிகளிலும் நூல் நிலையங்களிலும் வைக்கப் பட்டிருக்கிறது. புத்தொளிகொண்டு சரித்திரத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் ஆராய்ச்சி செய்ய உதவும் திறன் வாய்ந்த ஆசானுயத் திகழும் அந்த கலைக் களஞ்சியத்தில் இஸ்லாம் மதத்தைப் பற்றி கிழ்க்கண்டவாறு இருக்கிறது:

"இஸ்லாம் மதம், மற்ற மதங்களைப் போலவே, ஆத்மீகத் துறையில் பாட்டாளிகளை ஒடுக்க, சுரண்டும் வர்க்கம் உபயோகிக்கும் பிற்போக்கு நோக்கு கோண்டதாகவே இருந்திருக்கிறது...

"இஸ்லாத்தைப் பரப்பும் கருத்தோடு, முஸ்லிம் அல்லாதவர்மேல் தொடுக்கப்படும் 'புனிதயுத்த'மாம் ஜெகாட்டை கொரான் அனுமதிக்கிறது; சிபார்சு செய்கிறது."

"கொரான், அல்லாவினல் ஏற்படுத்தப் பட்டதாக நினைக்கும் அடிமை கொள்வதையும், சுரண்டலையும், சொத்துரிமையையும், பொருளாதார ஏற்றத் தாழ்வையும் ஆதரிக்கிறது"

'பிளேட் பாரத்'து புத்தகம் இதுபோலச் சொல்லவில்லை, தோழர்களே! புதிய. பெரிய சோவியத் கலைக் களஞ்சியத்தின் 18-வது வால்யூமில் தான் இப்படி இருக்கிறது!

இந்துமதத்தை விட எத்தனையோ மடங்கு உயர்ந்த முஸ்லிம் மதத்தையே சோவியத் நாடு "பிற்போக்கு" நோக்கு கொண்டதென தூற்றியிருக்கிறது. இது ரஷ்யாவில்!

இதோ—இங்கே பாருங்கள்! நாற்றமெடுத்த, பூச்சிகளும் புழுக்களும் நெளியும் இந்து மதச் சாக்கடையை இங்குள்ள கம்யூனிஸ்டுகளோ கதாகாலட்சேபம் செய்து கட்டிக் காத்திட நினைக்கிருர்கள். அது மட்டுமா? தாங்கள்...."நடைமுறையைப் பொறுத்தமட்டில் கட்சித் திட்டத்தில் பகிரங்க நாஸ்திகம். வெளிப்படையான மத எதிர்ப்பு இடம்பெறக் கூடாதென்று கச்சிதமாகக் கூறுவதாக"வும், தோழர் ஜீவா 'ஜனசக்தி'யில் கூச்சம் சிறிதுமில்லாமல் எழுதுகிருர்.

கம்பராமாயணச் சாக்கடையிலே சந்தனமணம் நுகரப் புறப்பட்டிருக்கும் ஜீவா-பகுத்தறிவுப் பூக்கடையில் புலால் நாற்ற மடிப்பதாக மூக்கைப் பிடித்துக் கொள்ளும் ஜீவா குழப்பம் தெளிய வேண்டும். குழப்பம் உண்டு பண்ணுவது தான் தனது நோக்கமென்ருல் —அதற்கு நாம்தான் என்ன செய்யமுடியும்?

ஃ

**முரசொலி**

★


**உள் நாடு**

ஆண்டு சந்தா ரூ. 6-0-0
ஆறு மாத சந்தா ரூ. 3-8-0
தனி இதழ் 0-2-0

**வெளி நாடு**

ஆண்டு சந்தா ரூ. 7-0-0
ஆறு மாத சந்தா ரூ. 3-8-0
தனி இதழ் 0-2-0

ஆறு மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.




## கொலைக்கான சூழ்நிலைகள்.

16

பாட்டியம்மா விபரம் சொல்லும் வரையில் நானும். அம்மாவைக் கொலை செய்தது அப்பாதான் என்று எண்ணியிருந்தேன். பிறகுதான் தெரிந்தது — அம்மா கொலை செய்யப்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் எவை என்பதும், ஏன் கொலை செய்யப் பட்டார்கள் என்பதும் !

அம்மா, அப்பா, பாட்டி முதலியோர் கூலி வேலை செய்து பிழைத்த தேயிலைத் தோட்டம் ஒரு வெள்ளைக்கார முதலாளிக்குச் சொந்தமானது- அந்த முதலாளியின் பெயர் காக்துரை—ஆனால் அந்த வட்டாரத்துத் தொழிலாளர்கள் அவனை டாக்துரை என்றுதான் தங்களுக்குள் அழைத்துக் கொள்வார்கள். குணத்தைக் கொண்டு அவனுக்கு அந்தப்பெயர் அமைந்தது என்பார்கள். ஆனால் என் பாட்டி அதற்கு சொன்ன விளக்கமே வேறு! பெண் மோப்பம் பிடிப்பதிலே அவன் கை தேர்ந்தவன். மோப்பம் பிடிக்கும் அந்தப் பண்புதான் அவனுக்கு டாக்துரை என்ற பட்டத்தை வழங்க மிகப் பொருத்தமான காரணமாயிருக்கும் என்பது பாட்டியின் வாதம் அது என்னவோ — முழுக்க முழுக்க உண்மை என்பது, தேயிலைத் தோட்டத்திலே நடைபெற்ற அக்கிரமச் செயல்களைப் பாட்டி வர்ணித்த போது உறுதியாகி விட்டது எனக்கு!

அதிகாலையிலே எழுந்து, குளிரால் நடுங்கியபடி, தேயிலைக் கூடைகளை முதுகிலே சுமந்து, தேயிலைக் கொழுந்து பறிக்கும் வேலையிலே ஈடுபடும் எண்ணிறந்த பெண்கள் வெள்ளை முதலாளிகளின் கண் சுழற்சியிலே யிருந்தும் அவர் தம் கட்டளையை நிறைவேற்றக் காத்து நிற்கும் கங்காணிகள் சிலரது துரோக புத்தியிலே யிருந்தும் தங்களைக் காத்துக் கொள்வது என்பது அன்றாடம் நடைபெறும் பயங்கர நிகழ்ச்சியாகவும், சமாளித்துத் தீரவேண்டிய வாழ்க்கைப் பிரச்சினையாகவும் ஆகிவிட்டது என்று பாட்டி வருத்தத்தோடு கூறுவார்கள். முதலாளிகள், மேஸ்திரிகள், கங்காணிகள், இவர்களது பசிதீர்க்கும் பொருளாக மாறி, பின்னர் தங்கள் வயிற்றுப்பசியைத் தீர்த்துக் கொள்ள வழி தேடிக் கொள்ளும் பரிதாபத்திற்குரிய பாவைகள் சிந்தும் ரத்தக் கண்ணீரிலே முளைக்கும் தேயிலைக் கொழுந்துகள்தான் நாம் சுவையோடு, நாக்கைத் தட்டிக் கொண்டு, சூடு ஆறிவிடாமல் அருந்துகிற தேநீர் என்று எண்ணுகிறபோது, நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது! -இப்போதெல்லாம், தேயிலைத் தோட்டங்களிலே, மிருகவெறியின் கோரதாண்டவம் அவ்வளவாக இருக்க முடியாது!—முதலாளிகளும், மேஸ்திரி, கங்காணிகளும், மனிதத்தன்மை பெற்றவர்களாக மாறிவருகிறார்கள்—மாறித்தான் தீரவேண்டும் என்கிற அளவுக்கு தொழிலாளவர்க்கத்தின் மான உணர்ச்சிப் போராட்டம் தலை தூக்கியிருக்கிறது. ஒரு சாண் வயிறைவிட, ஒருசாண் கயிறு மேலப்பா — இந்த எண்சாண் உடம்பை எலும்பு தெரியத் தேய்த்து உழைப்பது போதாதென்று, மானத்தையும் தானம் செய்யவேண்டுமென்று எண்ணுகிற மமதைக்கு இடங் கொடோம்—என்ற உணர்ச்சி முழக்கம், ஏழையர் முகாமிலே யிருந்து எழும்பிவிட்ட காரணத்தால், எதையும் எப்போதும் செய்யலாம், ஏன் என்று கேட்க ஆளில்லை என்று இறுமாந்திருந்த இழிதகையோர் இப்போது கொஞ்சம் அடங்கித்தான் போய்விட்டார்கள். இந்த நல்லறிவு இயல்பாகவே பெற்றவர்களும் — முதலாளிகளாக— மேஸ்திரிகளாக — கங்காணிகளாக—ஸ்டோர் கீப்பர்களாக அப்போதும் இருந்தார்கள்— ஆனால், அவர்கள் தொகையிலே மிகமிகக் குறைவு!— புதுமைப்பித்தன் எழுதிய துன்பக்கேணி என்ற கதையை நீங்கள் படித்திருக்கிறீர்களோ இல்லையோ; பரிமளா படித்திருக்கலாம்—அந்தக் கதையிலே வரும் சோகச் சுருள்கள் உண்மையிலேயே நடைபெற்றிருக்குமா? அவ்வளவு பெரிய வேதனைக் காடா தேயிலைத் தோட்டம்? என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றும்! வெள்ளையம்மாள் என்ற ஆதிதிராவிடப் பெண், தன் கணவனை தமிழகத்து சிறையிலே அடைத்துவிட்ட காரணத்தால், பிழைக்க வழியின்றி தவித்த நேரத்திலே கங்காணி ஒருவன் மூலமாக இலங்கைக்கு செல்கிறாள் — கணவன் தந்த அன்புச் சின்னம் பெண் குழந்தையாக வயிற்றிலே வளருகிறது — அ
நேரத்திலே, தேயிலை பறிக்
வேலையில் இலங்கை பூமி
''வாட்டர் பாலம்'' தேயி
தோட்டத்தில் நடைபோ
அந்தப் பெண்மணி, பரங்
துரைமாரின் கண்களுக்கி
யாகி, கற்பை வாடகை
விரும் நிலைபெறுகிறாள்—
வளர்த்த செல்வம் பிறக்கி
அதுவும் வளர்கிறது—அ
யாவது ஒழுங்காகப் ப
காக்க வேண்டுமென்று உ
எடுத்துக்கொள்கிறாள்; ஆ
அவளது மகளும், கற்பழிக்
படுகிறாள்—யாரால்? —தா
யார் சூறையாடினு
அவனே மகளையும் சூறைய
னுன்-இதுதான் துன்பக்கே
யின் கதைச் சுருக்கம். இ
யும் படித்துவிட்டு தேயி
தோட்டத்துக் கொடுமைக
யும் அனுபவித்துப் பார்த்
அது-துன்பக்கேணியாக ம
மல்ல; துன்பக்கடலாக
யிருக்கிறது என்ற முடிவுக்
யாரும்வருவார்கள். நான் ஏ
சொல்ல வந்த கதையைச் சுரு
மாகச் சொல்வதை வி
விட்டு, சுற்றி வளைக்கிறே
என்று நீங்கள் கருதுவீர்கள்
பெரியவரே! என்ன மன்னி
வேண்டும் — அம்மாவி
கொலை—ஒரு மர்மச் சுழ
அதை யார் செய்தது என
நிரூபிப்பதற்கும், என் அப்
குற்றவாளியல்ல என்ப
நீங்கள் ஒப்புக் கொண்டே
வேண்டும் என்பதற்கும், ந
விளக்கும் தேயிலைத் தோ
டத்து சம்பவங்கள் துணை
யும் என்று நம்புகிறேன். எ
னுடைய இந்தக் கதையை
கேட்கும் உங்களது முகத்தி
எந்த விதமான பிரதிபலி
களும் காணவில்லை என்பதி
ருந்தே, உங்களுக்கு இந்
கதை பிடிக்கவில்லை யென்
நான் நிச்சயிக்க முடியாது
கதையிலே நீங்கள் ஒன்
போயிருக்கிறீர்கள் என்
நான் முடிவு செய்கிறேன்
ஒரு வேளை இந்த முடிவு த
றாகக் கூட இருக்கலாம்
என்று துரை பேச்சை நிறுத்
சற்று தயங்கியபடி, கோ
போர்டில் உள்ள ஒரு கால
குழியில் தள்ளும் முயற்சி
ஈடுபட்டான்—அப் போ




Filmed as bound

யாண்டிக் கிழவர்-''நீசொல்து முற்றிலும் உண்மை—நீசால்லும் கதையிலே நான்ய் மறந்துதான் போயிகிறேன் -- மிச்சத்தையும்சால்லு! எனக்கு. உன்தலியைப் போல முகநடிப்புக் காட்டி, கதையை ரசிக்தெரியாது என்பதுஉண்மைன்! ஆனால், நீ கூறும் ஒவ்வாரு எழுத்தையும் விடா மனதில் பதிய வைத்துக்கொண்டு, உன் கதையைத்தொடர்ந்து வருகிறேன் நான்-சோகக் கதை! மிக மிகசாகக் கதை! சொல்லு தம்பிசால்லு! உன் அப்பா கொலைராரல்ல என்று நீ எப்படிருபிக்கப் போகிறாய் என்பதைறியநான்அவசரப்படவில்லை. லங்கையின் தேயிலைத் தோட்த்துக் கொடுமைகளை, உன்ப் போன்ற இளைஞர்கள்ந்த அளவுக்குத் தெரிந்துவத்திருக்கிறீர்கள் என்பதைறியவே ஆசைப்படுகிறேன்-லங்கையிலே சென்று தமிழர் சுரண்டுகிறார்கள் எனண்ணிக்கிடக்கும் பலரிலேனும் ஒருவன்; இப்போல்லவா தெரிகிறது; இலங்கைவர்களைச் சுரண்டுகிறதேரி. இவர்கள் இலங்கையைச் ரண்டவில்லை என்கிறண்மை!

அப்பனே! எனக்கு அலுப்தட்டுமோ என்று நினைத்து,ன் கதையில் வரும் எந்தபவத்தையும் குறைக்காதே-ன் இதை அணு அணுவாககிறேன்— பரிமளாவுக்காகவண்டுமானால், இடைடையே சில காதல் நிகழ்ச்சிளையும் உன் கதையிலேணைத்துக் கொள்'' என்றுன்முறுவலுடன் கூறினார்.

கிழவரின் பேச்சு துரைக்குக்க மூட்டியது. அவன்ண்டும் தொடர்ந்தான்.

''நான் சொல்வதெல்லாம்—ன் பாட்டி மூலமாகவும்,தருவிலே உள்ளோர் மூலகவும், அப்பா விட்டுச்சன்ற டைரியில் உள்ளறிப்புகள் மூலமாகவும்டைத்த சம்பவங்கள் என்தை நீங்கள் மறந்துவிடக்டாது—நீங்கள் சொன்னதுபாலவே. பரிமளா தெரிந்துகாள்ள வேண்டிய காதல்ம்பவங்களும் சில இருக்ன்றன.

அந்தக் காதல் அத்தியாயங்ள் அனைத்தும், கரைபட்டுப்பான அத்தியாயங்களேதான்!ன்று அவமானக்கரை —ல்லது ரத்தக்கரை—இப்படிதாவது ஒரு கரைபட்டுடிந்துவிட்ட சோக சித்திரங்ள்தான் நான் அறிந்த காதல்ம்பவங்கள்— வெள்ளை முதளிகளின் கொடுமையும்,ங்காணிகளின் அற்பபுத்தியும்,ட்டிக் கொடுத்து காசு பறிக்கும் வெறிச் செயலும் எந்த அளவுக்கு ஓங்கியிருந்தது என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்—காதல் சம்பவந் தான்!—இந்த சம்பவத்திற்கு அப்பா, அவரது டைரியிலே எழுதியிருக்கிற குறிப்பும், அவரது சொந்தக் கருத்தும், மிக நீளமானவை. அதை சுருக்கமாகவே கூறுகிறேன்'' என்று துரை சொன்னதும் ''கேள் பரிமளா நன்றாக!இந்தக் கதைஉனக்காகத்தான்!'' என்று மாயாண்டிக் கிழவர் பரிமளாவைப் பார்த்தார் — பரிமளா, புன்னகை புரிந்துவிட்டு, ''நீங்கள் வேண்டுமானால் காதை அடைத்துக்கொள்ளுங்களேன் காதல் கதை யென்றால் கசப்பாக இருக்கும்''—என்று கேலி பேசினாள்.

''பரிமளா! இப்படி, இடையிலே குறுக்கிடக் கூடாது—டெண்ட் சினிமாக்களில் ஏழெட்டு ''இன்டர்வெல்'' வருகிற மாதிரியல்லவா நீங்களும் என் கதைக்கு இன்டர்வெல் போடுகிறீர்கள் என்றான் சிரித்துக் கொண்டே துரை!


''சரி! சோடா கலர் பிடா!—ம்! படக் கூட்சி ஆரம்பமாகட்டும்!'' என்றாள் பரிமளா!

துரை துவங்கினான். ''குப்பன்—சீதா இருவரும் எங்கள் தெருவிலே பிரசித்தி பெற்ற காதல் ஜோடி — ஒருயிரும் ஈருடலும் என்றே வாழ்ந்தார்கள்—தெருவாரின் எதிர்ப்பு, சொந்தக்காரர்களின் கண்டனம்—பெற்றோர்களின் எரிச்சல்—அடக்குமுறை — எதையுமே லட்சியம் செய்யாமல் அவர்களது காதல் வளர்ந்தது-குப்பனைத் தவிர வேறு யாரையும் மணம் புரிந்துகொள்ள மாட்டேன் என்று சீதை கண்டிப்பாகக் கூறிவிட்டாள். குப்பனும் அதைத்தான் கொஞ்சம் உரத்த குரலிலே கூறினான்—அதனால் அவர்கள் இருவரின் திருமணம் தடைபட்டுக் கிடந்தது—குப்பனை எப்படியாவது கொன்றுதொலைத்துவிடவேண்டும் என்று சீதையின் குடும்பத்தார் முடிவு செய்தார்கள்—அந்த ஆவேசம் தணியும் வரையில் வெளியூரில் போய்வாழலாமென்று குப்பன் தீர்மானித்து அதன்படியே வேற்றூர் சென்று சில நாட்கள் வாழ்ந்தான். குப்பன் சீதா—காதல் காவியம், தெருவிலே பரவி. தேயிலைத் தோட்டத்திலே பரவி, முதலாளிகள் வீடு வரையிலே பரவிற்று!—டாக் துரை அந்த சிட்டைப்பிடிக்கதிட்டம் வகுத்தார் — கங்காணி காளிமுத்து என்ற வலையை உபயோகித்தார். அந்தத் துரோகி காளிமுத்து சீதையை எப்படியோ ஏமாற்றி டாக்துரையின் பசியைத் தணித்து விட்டான். சீதையின் கற்பு சூறையாடப் பட்ட சேதி, அவளது பெற்றோருக்குத் தெரிந்தது — துடித்தனர் — விஷயத்தை வெளியிலே சொல்ல அஞ்சினர் — மகளின் எதிர்காலம் இருளாகிவிடுமே எனக் கலங்கினர்.செய்தி,காட்டுத்தீயாக மாறுவதற்குள்சீதாகல்யாணத்தை நடத்திவிட வேண்டுமென்று அவசரப்பட்டனர்.

வெளியூர் சென்றிருந்த குப்பனும் வந்து சேர்ந்தான் — சீதாவின் தாய் தந்தையர் கண்ணில் பட்டுவிடாமல் பதுங்கிப் பதுங்கி நடந்தான். ஒருநாள், சீதையின் தகப்பனார். தெருவிலே சென்ற குப்பனை கூப்பிட்டார்—குரல் கேட்ட குப்பன் திடுக்கிட்டான்—திகைத்தான்—ஓடவழியில்லை — 'உயிர் போயிற்று' என எண்ணியவாறு நின்றான்— ''சீதை உனக்குத்தான்!'' என்ற வார்த்தைகள் அவனது காதுகளில் விழுந்தன. அவனையே அவனால் நம்ப முடியவில்லை அடிபட்டு சாகத்தான் போகிறோம் என்று அஞ்சி நடுங்கிய அவனுக்குஇந்த இன்பச்சேதி எப்படியிருந்திருக்கும் என்பதை, காதலால் தவித்திடும் மாந்தரே அறியமுடியும்''—என்று கூறியபடி துரை, பரிமளாவை கடைக்கண்ணால் பார்த்தான். அவள் இவனைப் பார்த்தாள். இருவரையும் கிழவர் பார்த்தார்—சிரித்தார் — தனக்குள்ளாகவே ''உம் — இடைவேளை தேவையில்லை'' — இது கிழவர் கிண்டல்!— துரையின் கதை எழுந்தது—

''குப்பனுக்கும் சீதைக்கும் திருமணம்—நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன —மணமகள் மேடைக்கு வந்துவிட்டாள் — அவள் உள்ளமெல்லாம் எப்படியிருந்திருக்குமோ—ஆனால் முகம் மட்டும் வெளிறிப்போய் இருந்தது. இது என் அப்பாவின் டைரிக் குறிப்பிலே உள்ள வாசகம்! தான் காதலனிடம் சொல்லாமலே தப்பித்துக்கொண்டோம என்கிற முடிவான துணிச்சல் அவளுக்கு ஏற்படவில்லை— தாலி கட்டப்போகும் நேரம்—மாப்பிள்ளையைக் கூப்பிட்டார்கள். குப்பனோ, எனக்கு இந்தத் திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டு, மணப் பந்தலைவிட்டு வெளியேற ஆரம்பித்தான்.

''கற்பிழந்தவளை என் தலையிலே கட்டும் நாடகம் இது!'' என்று கத்தினான் — காட்டுமிராண்டி போலக் கூத்தாடினான் — எல்லோரும் ஓடிப் போய் அவனை சமாதானம் செய்து பார்த்தார்கள். அவனோ நெருப்பில் கால்வைத்தவனைப் போல ஆடினான்—யாரோ. குடும்பங் கலைக்கும்.கோணங்கிகள் – சீதையின் சேதியை அவனிடம் கூறிவிட்டார்கள் போலும்! அதனாலேயே அந்த



திடீர் மாறுதல் விளைந்தது. வெளியேறும் குப்பனது கால்களைப் பிடித்துக் கொண்டு, சீதை அலறினாள்!-''அத்தான்! அத்தான்-என்னை மன்னித்து விடுங்கள்! எதிர்பாராமல்-என் இஷ்டத்துக்கு விரோதமாக நடைபெற்றுவிட்ட காரியம்! உங்களைத் தவிர வேறு யாரை யத்தான் என்மனம் நாடும்? என்னைக் கைவிடாதீர்கள்'' என்று சீதை அழுதாள். புதுமணம் பெறலாம்—புது வாழ்வு துவங்கலாம் — என்ற பூரிப்புடன், பூமாலை தாங்கும் மார்பினளாய் காட்சி தந்த அந்த பரிதாபத்திற்குரிய சிறுமி, பதறி அழுதாள்!

''பாதகிதான் நான்—பாவ காரியத்திற்கு இந்த மேனியைத் தந்தவள்தான்—பசிகார மிருக மொன்றுக்கு இரையானவள் தான்—இருந்தாலும் என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் அத்தான்! எச்சிற் பண்டம் குப்பையிலே என்பீர்கள் ஆனால், பண்டத்திற்கும் இந்தப் பாவைக்கும் அதிக வித்யாசமிருக்கிறது அத்தான்— திருடப்பட்ட தங்க மாலையை மீண்டும் பெற்றால், கழுத்திலே அணிவது கிடையாதா அதன் சொந்தக்காரர்? அது போல நான் திருடப்பட்ட தங்கமாலை!'' என்று கதறினாள். அவன் காலைவிடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டாள்—என் அப்பா—குமார வடிவுதான் அங்கேசமாதானத் தூதர்—அவரும் எவ்வளவோ காரணங்களைஎடுத்துச்சொல்லி சீதாவுக்காக வாதாடியிருக்கிறார்—அந்தக் காரணங்கள் எல்லாம் அவரது டைரியிலே அழகாகவும் — கட்டுரைகள் போலவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாவின் பேச்சையும் குப்பன் மறந்துவிட்டான்.

''குப்பா! உன் மீதுள்ள ஆசையில் உன்னையே அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில்தான்—சீதை, தனக்கேற்பட்ட இழிவை உன்னிடம் கூறாது மறைத்திருக்கிறாள்-வேண்டுமென்று அவள் விரும்பிச் செய்த காரியமல்ல இது! அவள், திருடப்பட்ட தங்கமாலைதான் — அணிந்து

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

# குமார விஜயம்

"நமஸ்காரம்!"

"ஓ குமாரா? வணக்கம்! வணக்கம்!"

"மெது கிராமத்தையே மறந்துவிட்டீர்கள் போலிருக்கே!"

"கிராம மென்ன குமார், பெற்ற தாய், உன்னைப்போன்ற உற்ற நண்பர்கள் உறவு முறைக்காரர்கள் அனைவரையும் விட்டுத் தான் சென்னையிலே இருக்கிறேன். கோபுரத்திலே இருந்தவர்கள் கொஞ்சம் தவறினால் என்ன கதியாவார்களோ அந்தக் கதிதான் இப்போது எனக்கு—என் குடும்பத்திற்கு! அது மட்டுமா குமார், நல் வாழ்வு நடத்துகிறவர்களை அதுவும் நெறி தவறாது வாழ்க்கைச் சகடத்தை ஓட்டுகிறவர்களை இம்சிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு நமதூர் பெரிய மனிதர்கள் அட்டகாசம் செய்தார்களே—அப்போதுகூட நான் என் இயக்கப் பாதையை விட்டு விலகிய துண்டா?"

"எனக்குத் தெரியாதா என்ன; இருந்தாலும நீ இந்த இயக்கத்தில் இருப்பதுதான் எனக்குக் கூட அதிருப்தி நண்பா!"

"இஃம்! ஏன் நல்லவனாக இருக்கிறாய்? நாணயம் உனக்கேன்? என்று கேட்கிறாய், அப்படித் தானே குமார்!"

"இல்லை பொன்முடி! உனக்குத் தெரிந்த பெரிய மனிதர்களெல்லாம் இன்று காங்கிரசிலே தானே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீ நல்லவனாக நடந்து கொண்டிருந்தால் இந்நேரம் சர்க்கார் உத்தியோகத்தில் இருந்திருக்கலாமல்லவா! அதற்காகச் சொல்ல வந்தேன்"

"முகஸ்துதி காட்டி முன்னேற்ற மடைவதைக் காட்டிலும் எதிர்த்துச் சாவது நல்லதெனக் கருதுபவன் நான், என் குணம் உனக்குத் தெரியாதா என்ன! எங்களது கட்சிக்கு பாட்டன் இட்ட பெயரே சுயமரியாதைக் கட்சி! குமார், ஏன் இந்தப் பழங் கதையெல்லாம். நீயோ சென்னைக்குப் புதிது! பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கின்றன. அதைப் பார்த்தாவது நேரத்தை கழிக்கலாம் வா!"

"முதலில் நான் அசெம்பிளியை பார்க்க வேண்டும் பொன்முடி

'அட பைத்தியமே! மத சார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு வாயிலிலே மதச் சின்னத்தை செய்து வைத்திருக்கும் அசெம்பிளியையா முதலிலே பார்க்கத் துடிக்கிறாய்? வெள்ளைக்காரர்களை வாயிலே வந்தபடி யெல்லாம் திட்டுகிறீர்களே, அந்த வெள்ளைக்காரர்கள் கட்டிவிட்டுப் போயிருக்கிறார்களே பெரும் பெரும் கட்டிடங்கள் அதைப் போய்ப் பார்க்கலாம் முதலில்!"

"பிரயோஜனம்!"

"பிரயோஜனமா? இப்போது உனக்கு பிரயோஜனமாகத் தெரியாது தம்பி! அந்த வெள்ளையர்கள் இந்த நாட்டை விட்டுப் போகும்போது அவர் கட்டி வைத்த கட்டிடங்களை யெல்லாம் இடித்துவிட்டுப் போயிருந்தால், அப்போது நீங்கள் அறிந்திருக்க முடியும் அவைகளின் உபயோகத்தை! சென்னை கார்ப்பரேஷன் நடைபெறும் 'ரிப்பன் பில்டிங்ஸ்,' சர்க்கார் மாளிகை, தென்னிந்திய ரயில்வே அலுவலகம், இவைகளை யெல்லாம் நமது சர்க்கார் கட்டி யிருக்கும் என்று நினைக்கிறாய்!

நெஞ்சிலே கை வைத்துப் பேசு! வெள்ளைக்காரன் இந்த நாட்டில் உருவாக்கிய அத்தனை ஆக்க சக்திகளையும் ஒழித்திருப்பானேயானால். ஒரு நாளைக்குக் கூட இந்த நாட்டின் மந்திரிசபைகள் நிலைத்திருக்க முடியாது என்பதை மறந்து விடாதே! சென்ற வாரம் பிரதமர் காமராஜர் மதுரையில் கூடிய கடைநிலை ஊழியர் மாநாட்டில் பேசியிருப்பதைக் கண்டித்து உனக்கொரு கடிதம் எழுதலாம் என்றுதான் எண்ணியிருந்தேன். நீயே வந்து விட்டாய்!"

"என்னபேசினார்! 'வெள்ளைக்காரர்களைக் காட்டிலும் நாங்கள் ஏழைகளின் நல்வாழ்வில் விருப்பங் கொண்டவர்கள்' என்று தானே சொன்னார்"

"ஆமாம் சொன்னார்! என்ன சொன்னார்? 'வெள்ளைக்காரர்கள் உங்களிடம் அதிகம் வசூலிக்காததற்குக் காரணம் அவர்களுக்கு உங்கள் முன்னேற்றத்தில் அக்கரையில்லை; நாங்கள் உங்களிடம் அதிகமாக வரி வசூலிப்பதற்குக் காரணம் உங்கள் முன்னேற்றத்தில் எங்களுக்கு அதிக அக்கரையுண்டு" என்று தானே சொன்னார்"

"ஆமாம்!"

"உன்னைக் கேட்கிறேன்; அதிகமாக வசூலிக்காத வெள்ளைக்காரன் தர்பாரின் என்ன குறை இருந்தது; அதிகப்பணம் வசூலிக்கும் உங்கள் கட்சியின் ஆட்சியில் என்ன நிம்மதி இருக்கிறது? சொல்லு குமார்—கடிதமல்ல இது; கண்ணுக்கு நேராக இருந்து கேட்கிறேன். குறைவாக வரி வசூலித்த அவன் செய்து காட்டிய மின்சார வசதிகளெங்கே, தபால் சலுகைகள் எங்கே; அதிலே காங்கிரஸ்காரர்கள் போட்ட கட்டுத் திட்டங்கள் எங்கே! நீங்களோ அதிக (!) அக்கரை கொண்டவர்கள்—அதிக வரி வசூலிப்பவர்கள்! ஏன் இந்த நிலை? பிரதமர் காமராசர் வேறொரு விஷயத்தையும் தவறான கருத்தோடு பேசியிருக்கிறார். 'வருமானத்திற்கு வேறுவழி காண்பித்தால் வரியே இல்லாமல் ஆட்சி நடத்தலாம்' என்று குழந்தை உள்ளத்தோடு கூறியிருக்கிறார். வரியில்லாமல் ஆட்சி நடத்துங்கள் என்று வரட்டு மூளைக்காரன் கூட சொல்ல மாட்டான் குமார். நீயே சிந்தித்துப் பார்! கொளுத்த வருமான முள்ள வரிகளை யெல்லாம் டெல்லிக்கு அளந்து கொட்டி விட்டு, நாம் மட்டும் ஏன் கவனிப்பாரற்றுக் கிடக்க வேண்டும் என்றுதானே சொல்லுகிறோம், இந்தியாவின் மொத்த வருமானத்தில் ஐந்தில் ஒருபங்கை சென்னை டில்லிக்குத் தருவதாக பழைய கணக்கே சொல்லுகிறது, இப்போது எவ்வளவோ? சென்னை சர்க்காரின் வருமானத்திற்கு நாம் காட்டுகிற வழி, நமது வரிப்பணத்தை டில்லிக்குக் கொடுக்காதீர்கள் என்பதே! செய்வாரா உமதுபிரதமர்? எங்கே பார்ப்போம்! வா போகலாம்!"

"பொன்முடி கொஞ்சம் பொறு! நாட்டில் வறுமைக்குக் காரணம் காங்கிரஸ் சர்க்கார் என்று சொல்லுகிறீர்களே, ஆண்டாண்டு காலமாக அடிமைப் பட்டிருந்த நாட்டை செப்பனிடுவதென்றால் சாமான்யமான காரியமா என்ன! எத்தனை எதிர்ப்புகள்! எத்தனை சச்சரவுகள்!"

"நேர்த்தியான வர்ணக் கண்ணாடி கொண்டு மறைத்தாலும் நேத்திரம் குருடு என்பதை நெடுநாளைக்கு மறைக்க முடியாது குமார். நாட்டின் நலத்திற்கென உனது சர்க்கார் கொண்டு வந்த திட்டத்தை எந்த எதிர்க்கட்சி எதிர்த்தது? சொல்லு பார்க்கலாம்!

'மேலும் இந்த நாட்டைவிட்டு வெள்ளைக்காரன் போகும்போது காங்கிரஸ் கட்சியை ஓட்டாண்டியாகவா சிங்காதனத்தில் அமர்த்தி விட்டுப் போனான்? அதுவுமில்லை! ஏராளமான பணத்தையல்லவா எண்ணித் தந்து போனான்! எங்கே இப்போது அதெல்லாம்! கிராமத்திலே உள்ளவன், இதை யெல்லாம் நீ எங்கே அறியப் போகிறாய்? 'தவறை மறைப்பதற்கு தலை விதி என்று நொந்துகொள்ளுக' என்று தவசிரேஷ்டர்கள் சொல்லிப் போன [illegible] தாரணியாள வந்த மந்திரிகளே சொல்லும் போது நாடு எப்படி முன்னேறும் நண்பனே!"

"என்ன?"

"ஆமாம். 'குமார விஜயம்' நாடகம் பார்க்கப் போன மந்திரி ராமனாதபுரம் ராஜா, புத்தி கற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் இந்த நாடகத்தைப் பார்க்க வேண்டும் மென்கிறார், தான் போனதையும் மறந்துவிட்டு. நிதி மந்திரி சுப்ரமணியம், நாடு முன்னேற கடவுள் வழிபாடு அவசியம் என்கிறார்—நாட்டுக்காகத்தான் தான் மந்திரியாக இருப்பதை துளியும் எண்ணிப் பாராமல்! வையகம் ஆளுகிறவர்கள் வைதீக வழி சென்றால் வளமெங்கே காண முடியும்? குமார், உன்னுடைய சென்னை விஜயம், உனது மந்திரியார் சொன்னது போல் பத்து 'குமார விஜயம்' பார்த்தது மாதிரி என்று நான் சொல்லுகிறேன்—நான் கூறும் குமார விஜயம்—உன்னுடைய 'விஜயம்' தானே அன்றி நாடகத்தையல்லப்பா!

## "தப்"பெடுப்பவர்கள் !

★

"இசபெல்லா கௌண்ட்டி ரிபப்ளிகன்" என்ற பத்திரிகையில் இந்த மாதிரி ஒரு அறிவிப்பு வெளியாகியிருந்தது:

"இந்தப் பத்திரிகையில் ஏதாவது பிழைகள் இருந்தால், அவை யாவும் வேண்டுமென்றே செய்யப்பட்டவை என்பதை எல்லோரும் உணரவேண்டும். ஏன் தெரியுமா? வாசகர்கள் ஒவ்வொருவரின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதுதான் எங்களது தலையாய நோக்கம். தப்பு கண்டு பிடிப்பதையே எத்தனையோ பேர் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய மனப்பான்மை கொண்ட வாசகர்களின் இஷ்டத்தை நாங்கள் அலட்சியம் செய்யலாமா? அதற்காகவே நாங்கள் வாரா வாரம் சில பிழைகளை அனுமதிக்கிறோம்"

## கர்நாடக தி. மு. க. முதல் மாநாடு

★

டிசம்பர் 18, 19, தேதிகளில் பெங்களூரில் நடைபெறும்.

### சமூகசீர்திருத்தமாநாடு

தலைவர் : காஞ்சி-கல்யாண சுந்தரம்
திறப்பாளர்: ப. உ. சண்முகம்

●

### அரசியல் மாநாடு

தலைவர்: என். வி. நடராசன்
திறப்பாளர் : அருண்மொழி
மற்றும்

அறிஞர் அண்ணா, கழக முன்னணி வீரர்கள் கலந்து கொள்வர்




# வேட்டை நாய்

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

சென்னை—அயன்புரத்தைச் சேர்ந்த நித்திலக்குமரி என்ற தங்கை ஒரு குட்டிப் பாடல் அனுப்பியிருக்கிறது. பாடல் எதைப் பற்றித் தெரியுமா? தனது அருமையான நாய்க் குட்டியைப் பற்றி.

ஆளை ஆளைப் பார்த்திடும்.
அங்கு மிங்கும் தாவிடும்.
வாலை வாலை ஆட்டிடும்.
வட்ட மிட்டு ஓடிடும்.

ரொட்டித் துண்டை நீட்டினால்
எட்டித் தாவிக் கடித்திடும்.
கெட்டிக் காரத் தம்பிபோல்
சுட்டித் தனம் செய்திடும்.

நன்று' என்று சொல்லவே
நன்றியுள்ள நண்பனும்;
என்றும் என்னைப் பிரிந்திடா
எனது நாய்க் குட்டியாம்!

இதுதான் பாடல். தங்கை தனது நாய்க்குட்டியைப் பற்றிப் பெருமைப் படுகிறது. ஆனால், நாயைப் பற்றி பலர் பலவிதமாக எண்ணுவார்கள். தெருவில் துரத்துவார்கள் பலர்; பட்டு மெத்தையில் படுக்க வைப்பார்கள் சிலர். ஆனால் அதற்கு எவரேவர் எப்பப்படி மதிப்பு தந்தாலும், அதனிடம் உள்ள ஒரு பெரும் குணத்தை மட்டும் எவரும் மறுக்க முடியாது.—நன்றி! இதுதான் நாய்களிடம் இருக்கும் சிறப்புக் குணம்... அப்படி நன்றியுள்ள நாயைப் பற்றி ஒரு ஆங்கிலப் பாடல் நினைவுக்கு வந்தது. அதையே இந்தவாரக் கதையாகத் தருகிறேன்; படியுங்கள்.

* * *

மாலைநேரம்.

அடுக்கடுக்கான மலைக் குன்றுகள்—அவைகளினிடையே பாய்ந்து வரும் நீர் அருவிகள்—பச்சைப் பசேல் என்று வளர்ந்து கிடந்த பயங்கர காட்டு மரங்கள் — சற்றைக்கொருதரம் எழும்பும் மிருகங்களின் கோர உறமல் — இப்படி இருந்தது அந்த மலைக் காட்டுப் பகுதி.

நினைத்தால் நெஞ்சு குலுங்கும்—பார்த்தால் பயம் கவ்வும்—அப்படிப்பட்ட அந்தக் காட்டுக்குள் நடந்து கொண்டிருந்தான் ஒரு மனிதன். அவன் கையிலே துப்பாக்கி இருந்தது. அதற்குமேலாக நெஞ்சிலே தைரியம் இருந்தது. புரிகிறதல்லவா; அவன் ஒரு வேட்டைக்காரன்! அவன் கால்கள் நடந்து கொண்டிருந்தன. கண்கள் சுற்றிச் சுற்றி பார்த்த வண்ணம் இருந்தன. ஆனால் அவனது கூர்மையான கண்களில் ஒரு மிருகமும் தென்பட வில்லை; சாதாரண பறவை கூட சிக்கவில்லை.

கொஞ்ச தூரம் சென்றான். நிற்காமல் நடந்து கொண்டிருந்த அவன், ஓரிடத்தில் 'டக்' கென்று நின்றான். அவன் கண்கள் பரபரப்புடன் பார்த்தன. ஏன்? என்ன நேர்ந்தது? ஏதோ ஒரு சப்தம்...மெல்லிய சப்தம் ...அவன் காதுகளில் விழுந்தது. ஆகவேதான் அவன் திடுக்கிட்டான். உற்று கவனித்தான். சப்தம் மறைந்தது. அவன் நடந்தான்.

கொஞ்ச தூரம் சென்றான். மீண்டும் 'சடக்' கென்று நின்றான். அந்த சப்தம் மீண்டும் கேட்டது. குட்டி போட்ட புலியா—செத்துக் கொண்டிருக்கும் சிங்கமா—கத்துவது எது? வேட்டைக்காரன் யோசித்தான். நாலாபுறமும். பார்த்தான். எதுவும் கண்ணில் தென்படவில்லை. நகர்ந்தான் சப்தம் வந்த திசையை நோக்கி பூனைபோல ஊர்ந்தான். துப்பாக்கியைத் தயார் செய்தபடி மெதுவாக நடந்தான்.

சப்தம் நிற்காமல் கேட்டுக் கொண்டிருந்தது. வேட்டைக்காரனும் நடந்து கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் ஒரு மலைச்சரிவுக்கு வந்துவிட்டான். சப்தம் அப்போதும் கேட்டது. வேட்டைக்காரன் கவனித்தான். அந்த சரிவுக்குக் கீழே ஒருபெரிய பள்ளம்-பயங்கரமான பள்ளம் தென்பட்டது. அவன் பள்ளத்தைப்பார்த்தான். மறுகணம் "ஆ" என்று அலறிவிட்டான். அந்தப் பள்ளத்திலேதான் அந்த சப்தத்தை எழுப்பிய—பயத்துடன் அவனை நடக்க வைத்த மிருகம் கிடந்தது. மிருகம் என்றால் ஆளைக் கொல்லும் மிருகமல்ல; ஆளைக் காக்கும் மிருகம். ஒரு நாய்! வேட்டைக்காரன் திகைத்தான். இந்த நாய் ஏன் இங்கு தனியாக இருக்க வேண்டும்—ஏன் இப்படி ஓயாமல் கத்த வேண்டும்—இப்படி யோசித்தான். அந்த இடத்தை நன்றாக உற்றுப் பார்த்தான். மறுகணம் இரண்டாவது முறையாக அலறிவிட்டான். ஏன் தெரியுமா? அந்த நாயிக்கு அருகில் ஒரு மனித உடல்—எலும்புகள் தெரிந்தும்தெரியாமலும், உடல் அழுகியும் அழுகாமலும் கிடந்த ஒரு பிணம் — கிடப்பதைப் பார்த்தான். அந்தப் பிணத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கத்தியபடி இருந்ததுஅந்த நாய்.

அது யாருடைய பிணம்? வேட்டைக்காரன் இப்படி ஒருகணம் யோசித்தான். மறுகணம் வேறு வழியில் அந்தப் பள்ளத்தில் அவசரமாக இறங்கினான். பிணத்தின் அருகிலேயும் நெருங்கிவிட்டான். ஆனால், அந்த —நாய் உணவில்லாமல் மெலிந்துகிடந்த நாய்—தனது மெல்லிய குரலால் அவனைப் பார்த்து குரைத்தது. பிணத்திடம் நெருங்க விடாமல் தடுத்தது. அவன் அந்த நாயை சமாதானப்படுத்தினான். பிணத்திடம் சென்றான். யாரெனப் பார்த்தான். மறுகணம் மூன்றுவது முறையாக அலறிவிட்டான்.

செத்துக் கிடந்த அந்த மனிதர் அந்த வேட்டைக்காரனுக்குத் தெரிந்தவர். பக்கத்து ஊர்க்காரர். நல்லவர். பெரிய மனிதர். பிரபல வேட்டைக்காரர்! ஒரு நாள் அவர் தனது வேட்டை நாய் சகிதமாக காட்டுக்குப் புறப்பட்டார். அன்று போனவர் அப்புறம் திரும்பி வரவேயில்லை. ஊர் மக்கள் துடித்தார்கள். பிறகு சிங்கத்தின் வாயில் சிக்கி விட்டாரோ—அல்லது புலியின் கோபத்துக்குப் பலியாகி விட்டாரோ என்றெண்ணி மௌனமாகி விட்டார்கள். ஆனால் அந்த வேட்டைக்காரப் பெரிய மனிதர் மிருகங்கள் எதாலும் கொல்லப்பட வில்லை. மலையில் ஓரத்திலே நடந்து கொண்டிருந்த போது—ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாவும் போது—அவர் தவறி கீழே பள்ளத்தில் விழுந்து விட்டார் — இறந்து விட்டார். அதைக் கண்ட அவரது வேட்டை நாய் பதறியது—துடித்தது! அந்தக் கணம் முதல் பிணத்திற் கருகிலேயே இருக்கிறது. உயிருள்ள வரை தன் எஜமானனைக் காப்பாற்றிய அந்த நாய் — அவர் செத்த பிறகும் அவரது உடலைக் காப்பாற்றி யிருக்கிறது.

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## சிறிய வயதிலே

### தூக்கம் தந்த பரிசு!

"இழுத்துக் கொண்டு வாருங்கள், அந்தத் தடிப் பயலை!" என்று உறுமினார் கடை முதலாளி.

பெருத்த உடம்பு — தடித்த மீசை—கோபக் கண்கள்—இப்படிக் காட்சியளித்த முதலாளிக்குமுன், பயந்த பார்வை-நடுங்கும் கைகள்—தடுமாறும் கால்கள்—இவைகளுடன் ஒரு தம்பியை இழுத்து வந்து நிறுத்தினார்கள், வேலைக்காரர்கள்.

முதலாளி அவனைக் கொன்றுவிடுவதைப்போல் பார்த்தார். அவர் கையிலே ஒரு 'லேபில்' ஒட்டிய 'பாட்டில்' இருந்தது. அதை அந்தப் பையனின், முத்துக்கு நேராக நீட்டினார். "டேய் உண்மையைச் சொல்! இந்த லேபிளை தலை கீழே ஒட்டினது யார்?" என்று கத்தினார்.

பையனின் கால்கள் கிடு கிடு வென்று நடுங்கின. வாய் திறந்தது. நா குளறியது. "நான்...நான்தான்... தூக்கக் கலக்கத்தில்..தவறுதலாக ஒட்டி விட்டேன்... என்று உளறினான்.

அந்த உளறலிலும் உண்மை இருந்தது. அவனுக்கோ வயது பத்து. லேபில் ஒட்டும் வேலை. அதுவும் இரவு பகலென்ற வித்யாசம் கிடையாது. கொஞ்ச நேர ஓய்வுதான்; மற்ற நேரமெல்லாம் ஓயாத வேலை. உடல் தாங்குமா? சமயத்தில் தூக்கம் குறுக்கிடும். அப்போது நேர்ந்த தவறு தான் அது.

ஆனால் முதலாளி அதை உணருவாரா? கோபத்துடன் அவன்மேல் பாய்ந்தார். தலை மயிரை இருகப் பிடித்துக் கொண்டார். கன்னத்தில் 'பளார்; பளார்' என்று அறைந்தார். தம்பி துடித்தான்; துவண்டான். 'ஐயோ; ஐயோ' என்று கத்தினான். கடைசியில் முதலாளிக்கு கை வலித்ததோ என்னவோ அடிப்பதை நிறுத்தினார். தம்பியும் உயிர் தப்பினான்.

முரட்டு முதலாளியின் குருட்டுக் கோபத்தில் சிக்கி, அடிபட்டு அலறிய அந்தத் தம்பி யார் தெரியுமா? அவன்தான் பத்தாவது வயதில் பாட்டில்களுக்கு 'லேபில்' ஒட்டி—முப்பதாவது வயதில் பார் போற்றும் எழுத்தாளனான சார்லஸ் டிக்கன்ஸ்!

## பெரிய மனிதர்கள்

# சிவப்பும், வெளுப்பும்!

அந்தியிலே சிறுமயக்கம் அடைந்து; விண்ணின்
அழகுநிலா கண்டு,பெரு மூச்சு விட்டு;

சந்தனத்தைத் தொட்டு, உடல் வெப்ப மாகித்;
தணல்மீது நிற்பதுபோல் தவித்துப்; பின்னர்,

சுந்தரியும் சுந்தரனும், தோளில் சாய்ந்து
சுகங்காணும் சமயத்தில்; காதல் கண்கள்,

அந்திநிறம் போல்சிவக்கும்! இதழ்கள்—முத்தம்
அதிகரித்தால், தாழம்பூ போல் வெளுக்கும்!

குடைபிடித்து அரசாண்ட தமிழைப்; பாது
காத்துவரும் பாவலர்க்கும்; நாவ லர்க்கும்;

அடிபட்ட பால்மரம்போல், கண்ணீர் நீட்டி
அழுகின்ற ஏழைகட்கும்; மகர யாழைத்

தடவிஇசை எழுப்பிவரும் பாண ருக்கும்;
சதமென்று வருவோர்க்கும்; அள்ளி ஈயும்

கொடைவள்ளல் இருகரமும் சிவக்கும்! கேட்டும்
கொடுப்பதற்கு இல்லைஎனில் முகம் வெளுக்கும்!

மலைகாட்டி, தோள்காட்டி, உறுமு கின்ற
மேகத்தின் இடிகாட்டி, சத்தங் காட்டும்

அலைகடல்போல் பெரியபடை ஓர் புறத்தில்.
அதுபோல மற்றுமொரு படைஓர் பக்கம்.

பலநாட்கள் இருபுறத்தும் மரண யுத்தம்.
போர்க்களத்தில் பாய்ந்துவரும் அம்பைக்கண்டு,

குலைநடுங்கும் கோழைகளின் கால் சிவக்கும்!
கோழைஉயிர் தப்பின்,அவன் செயல் வெளுக்கும்!

இலைநிழலால் பந்தலிடும் சோலை சென்று,
இளவயது அரும்புகளை மோதி; நீரில்

மலர்ந்துள்ள தாமரையைத் தழுவி; கொல்லை
முல்லைக்கு முத்தமிடும் தென்றல் போல;

இலக்கணத்தில் ஈடுபட்டு; இசைநூல் கேட்டு;
இலக்கியங்கள் பலகற்று; தினம் ஆராயும்,

கலைவாணர் தமிழ்நெஞ்சம்! சிவக்கும்! கற்றோர்
கூட்டத்தில் அவர்சென்றால் புகழ் வெளுக்கும்!

அழகுநிலா; விண்மீன்கள்; அல்லிப் பூக்கள்!
ஆனந்தம் தேடுகின்ற அன்றில்; நாவல்

பழம்போன்ற கருவண்டு; அந்த வண்டின்
பிரயாணம்; காதலரின் போதைப் பேச்சு;

நிழல்தேடும் உயிர்க்கூட்டம். வீட்டுக் குள்ளே
நீண்டெரியும் ஒளிவிளக்கு; யாவும் ஒய்ந்து


கிழக்கினிலே கதிர்பிறந்தால் வான் சிவக்கும்!
கதிர்வெய்யில் பாய்ந்தவுடன் நிலம் வெளுக்கும்!

இலைதின்னும் ஆடுகளை மேய்த்துக் கொண்டே
இங்குவந்த ஆரியரை எதிர்த்து, வாழ்வில்

பலதடவைப் போரிட்ட இரண்யன் போல;
பட்டாளச் சிரிப்போடு, பகைக்கூட் டத்தின்

தலைஅறுத்து; எதிரிகளின் இரத்தத் தாலே
தரைமெழுக, திராவிடப்போர் தொடங்கும்நாளில்

உலைக்களத்தில் புதுஇரும்பு தினம் சிவக்கும்!
உருப்பெற்ற ஆயுதத்தின் வாய் வெளுக்கும்!




# வேதியர் தூவும் விஷப்பொடி!

அரசியல் வாழ்க்கையில் விரத்தி ஏற்பட்டுப் போய் இல்லை—விரட்டி யடிக்கப்பட்டு 'தாணி அரித்யம்' என்ற தம்பிரான்களின் பாசாங்குப் பாட்டுக்கு தப்பூரா மீட்டிக்கொண்டிருக்கும் மாஜி கவர்னர், மாஜி கவர்னர் ஜெனரல், மாஜி முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியார் நவ 28ம் தேதி சென்னையில் அண்ணாமலை மன்றத்தில் பேசியிருக்கிறார்.

"குழப்பத்தைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுவதில் நம் சர்க்கார் முக்கிய பங்கு கொள்ள வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்" — என்று சொல்லியிருக்கிறார். குழப்பத்தை அடக்கி அமைதியை நிலைநாட்டுவதற்கான பணியில் சர்க்கார் ஈடுபட வேண்டுமென்பதை ஆச்சாரியார் எதிர்பார்க்கிறாராம்! நிலவுகின்ற குழப்பம் எப்பேர்ப்பட்ட குழப்பம்? அதையும் அந்த முனிவர் சொல்லாமலில்லை. "சமுதாயத்தில்; பொருளியலில் என்ன செய்வதென்ற சந்தேகம் இப்போது இருக்கிறது" —சமுதாயத்திலே உள்ள ஏற்றத் தாழ்வை, பொருளாதாரத்திலே உள்ள மேடு பள்ளத்தை சமப்படுத்த வேண்டுமென்பது குழப்பமாம்! ஆச்சாரியார் சொல்லுகிறார். அதற்காகவே, அந்தக் குழப்பத்தை ஒடுக்க வேண்டும் சர்க்கார். அப்படிப்பட்ட சமுதாயப் புரட்சிகூடாது. அரசாங்கம் கணை தொடுக்க வேண்டும்என்று சாணக்கிய பாணியிலே சொல்லுகிறார் சக்ரவர்த்தியார். "குழப்பங்களைத் தவிர்த்து அமைதியை நிலைநாட்டுவதில் நமது சர்க்கார் முக்கிய பங்கேற்குமென்று எதிர்பார்க்கிறோம்" இந்தசொற்றொடரிலே சாந்தம் திருநடனம் புரிகிறது, உட்பொருளோ அத்தனையும்பலாத்காரபோதனை! அதோடு மட்டுமல்ல; அந்த உதாரண குணத்தினருக்கு உலகத்தோடு முன்னேற வேண்டுமென்ற ஆசையுமிருக்கிறதாம்! அதையும் சொல்லிக் காட்டியிருக்கிறார். இரவு 7-மணிக்கு 'கம்பராமாயணம்' பற்றி பேசுவதாக ஒப்புக் கொண்டுவிட்டு மாலை 5-மணிக்கு அண்ணாமலை மன்றத்தில் 'உலகத்தோடு ஒட்டிவாழ்' என்று பேசுகிறவர். நடைபெறக் கூடிய காரியமா இது! அல்லது நல்ல உள்ளம் தந்த உபதேசமா? அல்லது விஷப் பொடியா?

★ 7-பக்கத் தொடர்ச்சி

கொள் அவளை!" என்று ஆயிரமாயிரம் ஆதாரங்கள் காட்டி சமாதான முயற்சியில் ஈடுபட்டார்—அப்பாவின் பேச்சு குப்பன்காதில் ஏறவில்லை — சீதையின் ஒப்பாரியும் அவன் கருத்தை மாற்ற வில்லை! திருமணம் நடைபெறவில்லை—குப்பன் வேறுபெண்ணை மணந்து கொண்டான்—சீதையும், குப்பனுக்குப் போட்டியாக — கங்காணி காளிமுத்துவுக்கு வைப்பாட்டியாகப் போய்ச் சேர்ந்தாள்—வெள்ளை முதலாளி விரும்புகிற நேரத்தில் அவரது அந்தப்புரத்தையும் அலங்கரித்தாள்—

அப்பா, தனது டைரியில் — இந்த இருகாதலரைப் பற்றியும் முடிவுரை எழுதியிருக்கிறார்—இருவருமே இருதயம் இல்லாதவர்கள் என்பது அப்பாவின் அழிக்க முடியாத அபிப்பிராயமாக அந்தக் குறிப்பில் ஏறியிருக்கிறது—இந்தக் கதைக்கும், அம்மாவின் கொலைக்கும் என்ன சம்பந்தமென்கிறீர்களா? நிறைய சம்மந்தமிருக்கிறது—அம்மாவின் கொலை — அப்பாவின் மனமாற்றங்கள்—எல்லாமே—இது போன்ற சில சம்பவங்களில்தான் பின்னிக் கிடக்கின்றன.—

## பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

இதை ஊகித்துக் கொண்டான் வேட்டைக்காரன். நாயின் நன்றியை எண்ணி வியந்தான். அதேசமயம் திடீரென்று அந்த நாய் வேகமாகக் குரைத்தது. பிணத்தை இரண்டு முறைத் தட்டுத் தடுமாறி சுற்றி வந்தது. அதன் கண்களில் கண்ணீர் கசிந்தது. உடல் நடுங்கியது. கீழே விழுந்தது. புரண்டது. மறுகணம் அதுவும் பிணமானது.

வேட்டைக்காரனின் கண்களிலும் நீர் கசிந்தது. அந்த எஜமானனின் உடலின் மீது நன்றி மறவாத நாயை எடுத்து வைத்தான். சருகுகளைப் பொறுக்கி இரண்டு உடம்புகளின் மீதும் போட்டான். தீ வைத்தான். அந்த நாயின் நன்றிக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் திரும்பி நடந்தான்.

★ ★ ★

மனிதர்கள் எல்லோரும்கூட நன்றியுடன் இருந்து விடுவதில்லை. ஆனால், அந்த நாய் தன்னை வளர்த்த எஜமானனிடம் கொண்டிருந்த நன்றியைப் பார்த்தீர்களா? அந்த நாயின் கதை நன்றி மறப்பவர்களுக்கு ஒரு நல்ல பாடம்; இல்லையா?

—சொர்ணம்

# பொதுவாழ்வு

# ★ தீப் பந்தம்! ★



சர்ச்சில்!

திக்குத் தெரியாமல் திணறிக் கொண்டிருந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு அவர் ஓர் மின்னல் கொடி! தனது வாழ்க்கைப் போராட்டத்தை வீரக் காவியமாகச் சிருஷ்டித்து தூவி எறிந்து, விம்மி பெரு மூச்சு விட்டுக் கொண்டிருந்த வெள்ளையர் மண்டலத்திற்கு வழி காட்டியாக உருண்டு கொண்டிருக்கும் தீப்பந்தம். போராட்டக் காதையை புரட்சி படிந்த எழுத்துருவங்களாக்கி இல்லந் தோறும், இங்கிலாந்து வாசிகளின் உள்ளந் தோறும் புகுத்திடச் செய்து காலத்தால் அழிந்திடாத 'புது மோக'த்தை சம்பாதித்திருக்கும் சாம்ராஜ்யாதிபதி. ஆம்; சர்ச்சில் நிகரற்ற அரசியல்நளினக்காரர், தூரதிசையிலிருந்து தன்னைக் கொல்ல பாய்ந்துவரும் துப்பாக்கிக் குண்டுகளை துரும்பாக எண்ணும் போர் வீரர்; மேடையைச் சுற்றி அமர்ந்திருப்போரை பெருமூச்சுவிடும்வெள்ளரிப் பழங்களாக்கிவிடும் தலை சிறந்த மேடைப் பேச்சாளர். நெஞ்சுக்கு நேராக பீரங்கியை வைத்துக்கொண்டு கேட்டாலும் தன் நெஞ்சிற்கு சரியெனப் பட்டதைத் துணிந்து கூறும் வைர நெஞ்சினர். இதோ ஓர் உதாரணம்;

லண்டன் பார்லிமெண்ட கட்டடத்தில் யாருடைய குரல் மேலோங்கி நிற்பது என்ற தோரணையில் லிபரல் கட்சிக்கும் கன்சர்வேடிவ் கட்சிக்கும் பலத்த போட்டி. தென்னாப்பிரிக்கா ரணகளமாகிக் கொண்டிருக்கிறது; வெட்டிப் போட்ட விறகுகளை வெயிலில் காய வைத்திருப்பதைப் போல அந்த வட்டாரம் முழுதும் தலையில்லா. போயர்களின் முண்டங்கள் சிதறிக் கிடந்தன, அங்கே போர் தளபதியாக இருந்த கிச்சனர் துரையை ஒரு ஏழை பத்திரிகாசிரியர் தாக்கி எழுதி விட்டதாக அவர் ஒருவருட சிறை தண்டனை பெற்று அப்போதுதான் விடுதலை பெற்றிருக்கிறார். இங்கிலாந்து அவனுக்குத் தாயகம்; ஒரு ஆண்டு காலமாக இரும்புக் கம்பிகளுக்கப்பால் இன்னல் பல அனுபவித்து வெளிவந்திருக்கும் அவருக்கு தாயகத்தைப் பார்க்க ஆசை இருக்காதா? இங்கிலாந்து செல்ல வேண்டுமென அரசியலாருக்கு மனுப் போட்டார்; கீர்த்தியாலும், தனக்குக் கிடைத்திருக்கும் கித்தாப்பாலும் கர்வியாக விளங்கிய கிச்சனர் அனுமதிக்க மறுத்து விட்டார். இந்தப் பிரச்சினை லண்டன் பார்லிமெண்டில் எதிரொலிக்கத் தொடங்கியது. அந்த நேரம் கன்சர்வேடிவ் கட்சி செல்வாக்கின் சிகரத்தில் வெற்றிச் சிந்து பாடி வீர உலா வந்து கொண்டிருந்த நேரம், கன்சர்வேடிவ் கட்சியின் சார்பாக சர்ச்சில் பார்லிமெண்டில் ஸ்தானம் பிடித்திருக்கிறார்.

"மன்னர் பிரானே, சிறை வாழ்வை மேற்கொண்டு, கொடுமைகளுக்காளாகி இப்போது விடுதலை பெற்றிருக்கும் ஒரு கைதியை தன் தாயகத்திற்கு வரக்கூடாதெனச் சொல்லுவதை நாங்கள் ஆட்சேபிக்கின்றோம்" — லிபரல் கட்சி கம்பீரமாக வாதாடியது.

"அரசர் பெருந்தகையே, தாயகத்திற்கு துரோகமிழைத்த தருதலை, யாராக இருந்தாலும், அரசாங்கம் அவனுக்கு இரக்கம் காட்டுவது அநீதி—நாங்கள் இதை மூச்சுள்ள வரை எதிர்ப்போம்"— கன்சர்வேடிவ் கட்சியின் தூண்கள் கர்ஜித்தனர். அதுவரை சர்ச்சில் வாயைத் திறக்கவேயில்லை, சர்ச்சில் பேசுவார், அதனுல் சக்கரவர்த்தியின் தீர்ப்பு நம் பக்கம் தானிருக்கும் என்று இறுமாந்திருந்தார்கள் கன்சர்வேடியினர். சற்றுநேரத்தில் "சர்ச்சில் பேசட்டும்" என்ற பெரும் கூச்சல் எழும்பியது.

இங்கிலாந்தின் இளங்காளை எழுந்தார்." எனது குரல் இங்கே ஒலிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் கன்சர்வேடிவ் கட்சியினர்தான். என்னைத் தேர்ந்தெடுத்து இங்கேநுழைய அரசாங்க அனுமதியைப் பெற்றுத்தந்தவர்களும் அவர்களே. அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக. ஆனுல் நான் அந்தக் கட்சி என்பதற்காக அந்தக் கட்சியின் பின்னேடியாக இருக்கமாட்டேன். தாய் நாடு திரும்ப துடிக்கும் ஒருஅரசியல் கைதியை தடுக்க நினைக்கும் கன்சர்வேடிவ் கட்சியை நான் கண்டிக்கிறேன்' — என்று முழங்கிவிட்டார். முழுச்சீமான்கள், அரைச் சீமான்கள் அனைவருமே மூக்கிலே விரல் வைத்து விட்டார்கள்,

"துரோகம்! துரோகம்!" என்ற பேரொலி பார்லிமெண்ட் பளிங்கு மண்டபத்தின் சுவர்களில் மோதி சண்டையிட்டன.

"துரோகம்! எது துரோகம்? எனக்கு நீதியெனப் பட்டதை நான் சொல்லுவதா துரோகம்? அதைத் தடுப்பதை, என் உரிமையைப் பறிப்பதாகக்கூட குற்றம் சாட்டுவேன்"—என்று அடித்துப் பேசினுர் சர்ச்சில்.

"சர்க்கார் உத்தரவைக் கண்டிப்பது அராஜகம்"—கன்சர்வேடிவ் கட்சி

"மனித சுதந்திரத்தைப்பறிப்பது எதேச்சாதிகார ஆணவம்"- சர்ச்சில்.

சர்ச்சிலின் கம்பீரமான பேச்சு இறுதியில் வாகை சூடியது. அந்த அரசியல் வாதி தாய்நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டார். அன்று தான் கன்சர்வேடிவ் கட்சியின் இறங்கு முகம் துவக்கம் என்று சொல்ல வேண்டும். நாளடைவில் சர்ச்சில், கன்சர்வேடிவ் கட்சியின் மீதிருந்த அபிமானம் குறைந்து லிபரல் கட்சிக்கு வந்து விட்டார். அந்த நேரத்தில் சர்ச்சிலுக்கு எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது, ஊரெங்கும் 'தேசத் துரோகி' என்று தூற்றினுர்கள். அவர்களுக்கெல்லாம் சர்ச்சில் "நான் கன்சர்வேடிவ் கட்சியை புகழ்ந்தவன்தான், அவ்வளவு அன்பு வைத்திருந்த அந்தக் கட்சியை விட்டு நான் ஏன் விலக வேண்டும்? அது பித்தலாட்டக் கட்சியாகி விட்டது" என்று சுருக்கமாகப் பதிலளித்து விட்டார்,

போர்வீரனுக ஆசைப்பட்டு முதன் முதலாக கியூபா கலகத்தில் ஈடுபட்டார். அடுத்தபடியாக உரிமைக்குப் போராடிய இமாலயத்தின் அடிவாரத்தில் வாழ்ந்த பட்டாணியர்களை நீதிக்குப் புறம்பான வழியில், அடக்கி இங்கிலாந்து வட்டாரத்தில் பெயர் பெற்ருர் சர்ச்சில். அப்பேர்ப்பட்ட சர்ச்சிலின், போர்வெறி கண்டிக்கத்தக்க நச்சுக் கொள்கை என்பதை நாட்டின் நலம் விரும்பிகள் எண்ணியதில் தவறில்லை தான். சர்ச்சில், அனுபவத்தால் யுத்த மந்திரியாக பணியாற்றி, முதல் உலகப் போரில் கெய்சர் பரம்பரையினரின் முதுகெலும்பை முறித்து, இட்லரின் ஆசைக் கனவுகளை சுக்கல் நூருக்கி இலக்கியத்திற்காக நொபெல் பரிசு பெற்று இன்று பரங்கிப் பழமாக இங்கிலாந்தின் பிரதமராக வீற்றிருக்கிருர், சர்ச்சில் அந்த அளவோடு தன் போர்க் குணத்தை மறந்திருந்தால் மாநிலம் அவரைப் போற்றியிருக்கும்!

சர்ச்சில் முதன் முதலாக பிரதமராக பதவியேற்றபோது "என்னிடம் என்ன சேவையை எதிர் பார்க்க முடியும்? உயிரைக் கொடுக்கிறேன். உடலில் ஓடும் ரத்தத்தை சிந்துகிறேன். என் லட்சியம்தான் இந்த இரண்டாவது உலகப்போர். வெளிப்படையாகக்கூற வேண்டுமானுல் 'அந்த என் லட்சியம், தான் நாஜிசத்தின் அழிவு! அழிவு!! . . அழிவு!!!" என்று தலைநிமிர்ந்து சொன்னதை யாரும் மறக்க முடியாதென்பதை யாரும் மறுக்க முடியாது தான்.

நேற்று வந்தவரை, இன்று எடை போட்டு நாளைக்கே நீக்கிவிடும் சக்தி பெற்று விளங்கும் இந்த ஜனநாயக காலத்தில் முன்பொரு முறை பதவி வகித்தவரை மறுபடியும் வருந்தி அழைத்து பதவியில் உட்கார வைக்கும் அளவுக்கு சர்ச்சில் நடந்து கொண்டிருக்கிருரென்ருல் நாஜிசத்திற்கு அழிவுகாலத்தைசிருஷ்டித்ததே அதற்குக் காரணம்; வேறல்ல!

தனதுஎண்பதாவது பிராயத்தில்மதிப்புக்குஆளாகி, வல்லரசு ஒன்றை தன் உள்ளங்கையில் வைத்து அழகு பார்க்கும் சர்ச்சில் இன்னும் அவர் உள்ளத்தில் பதிந்திருக்கும் போராசையை ஒழித்தால் உலகம் அவரை மறவாது.

## குடும்பம்

★

சர்ச்சிலின் மனைவி மிஸ் கிலமைன்டின் ஹோஜியா. சர்ச்சிலுக்கு ஒரு குமாரனும் மூன்று புதல்விகளுமுண்டு. அவர்களில் விக் ஆலிவர் என்பவர் புகழ்பெற்ற சினிமா நடிகை. சர்ச்சிலின் தந்தை ராண்டல்ப்சர்ச்சில், இங்கிலாந்தின் நிதி மந்திரியாகப் பணியாற்றியவர்.

★

## வெறியாட்டம்

★

"நாட்டுப்பாது காப்பு வெறும் படை வீரர்களின் எண்ணிக்கையைப் பொருத்ததல்ல. விஞ்ஞான அறிவு வளர்ந்து வரும் இந்தக் காலத்தில் நூதனக் கருவிகளின் துணைதான் அவசியம்"

—சர்ச்சில்

## யார் துரோகி?

★

சர்ச்சில் கன்சர் வெடிவ் கட்சியிலிருந்து விலகிய நேரத்தில் அவரை எதிர்க் கட்சிக்காரர்களெல்லாம் 'துரோகி' என்று தூற்றி வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் சர்ச்சில் தந்த பதில்:—

"மதிப்பிற்குரிய எனது நண்பர்கள் என்னைத் தேசத் துரோகி என்று கூறினராம். சிலர் இதைக் கேட்டு பரபரப்புக் கொண்டனர் அரசியல் விவாதங்கள் முற்றுகிற காலத்தில் தோற்றுவிடுவோமென பயப்படுபவர்கள் பிதற்றுவது சகஜம். அந்தமாதிரி பிதற்றுவது அவர்களது கோபத்தையும் வலிமையற்ற தன்மையையுமே காட்டுகின்றது. நான் தேசதுரோகிதான். ஏன்? பிரபுக்கள், வீட்டில் உல்லாசமாய் நடனமாடிக் கொண்டிருந்த சமயம் நான் தென்னுப்பிரிக்கா சென்று போராடினேன். எனது நாட்டிற்காக ரத்தம்சிந்தி போராடின நான் தேசத்துரோகி என்றே வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானுல், சர்க்காரில் பதவிக்கு மோப்பம் பிடித்து அலைந்து கொண்டிருந்த சிலரை என்னென்று கூறுவது என்பது எனக்குத் தெரியவில்லை."

—12—
RAS.

3.12.54

# கடைசிப்பக்கம்

வி. டி. சுந்தரமூர்த்தி — சேலம்

(?) சில ஆண்டுகளுக்கு முன் சேலம், நாமக்கல் பகுதிகளில் பாரதிதாசனின் 'இன்ப இரவு' நாடகம், நாட்டியம் முதலிய அரங்கங்களில் பங்கு பெற்று எதிர்க்கட்சிக்காரர்களால் அடி வாங்கிய சுரதாவும், முரசொலியில் கவிதை எழுதும் சுரதாவும் ஒருவரே தானு'

*ஆமாம்—இடையே தமிழரசுக் கழகத்தை மொழி வளர்ச்சிக் கழகமென எண்ணி ஏமாந்த சுரதாவும் இந்தக் கவிஞர் சுரதாவேதான்!*

சேலத்தான் — சேலம்

(?) திராவிட நாடு கிடைக்கும் வரையில் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன். செய்யலாமா?

*அய்யோ — வேண்டாம்! உண்ணாவிரதம் (!) இருந்து பல லட்சம் மக்களின் அவதியைப் போக்குவதற்காகவும் தான் திராவிடநாடு கேட்கிறோம்.*

தியாகராசன் — திருவாரூர்.

(?) கம்யூனிஸ்ட் கட்சி, கம்பராமாயணத்தில் பொதுவுடமையைத் தேடுகிறதே; கிடைக்குமா?

*பொதுவுடமையென்றால் தவறான அர்த்தம் வைத்துக் கொண்டு, ராமயாணத்தில் தேடுகிறார்கள் போலும்! தவறான அர்த்தப்படி பொதுவுமையைத் தேடுவதானால், ராமாயணத்தை விட பாரதம், 'பெட்டர்'!*

(?) நீங்கள் மானம்தான் பெரிதென்கிறீர்கள். ஆனால் மா-சே துங்கின் பொருளாதாரச் சீர்திருத்தத்திற்குப் பின்புதான் சீனாவின் மானம் காப்பாற்றப் பட்டது என 'மிஸ்டர். பொதுவுடமை' ஒருவர் சொல்லுகிறாரே?

*அவருக்குச் சொல்லுங்கள்; மா. சே. துங். விதை விதைத்தார்; ஆனால் அந்தத் தரிசு நிலத்தை உழுது போட்டவர் சிந்தனைச் சிற்பி சன்—யாட் சன் தான் என்பதை!*

ஓ. ஆர். பாலகிருஷ்ணன்-திருச்சி.

(?) ஒரு காதற் கன்னி, தன் உள்ள உணர்வுகளை எல்லாம் சிலையாக செதுக்கினால் அது எப்படியிருக்கும்.

*அந்த சிலையை வைக்க உலகத்தில் நிச்சயமாக இடமிருக்காது.*

எஸ். பழனி; சென்னை. 2

(?) பாரதிதாசனுக்குப் புரட்சிக் கவிஞர் பட்டம் கொடுத்தது யார்?

*அவரது கவிதைகள்.*

ஏ. எஸ். சாமி. இளையான்குடி.

(?) முட்டை முன்பா? கோழி முன்பா?—

*குடியரசு பதிப்பகத்தில் உள்ள சிங்காரவேலரின் கட்டுரைகளை வாங்கிப் படியுங்கள் தோழரே! விளக்கமான பதில் கிடைக்கும்.*

வை. சுந்தரமூர்த்தி — பண்ணுருட்டி.

(? சில மக்கள், தங்கள் தலைமுடியை ஆண்டவனுக்கு தருவது ஏன்?

*வைர முடி செய்து வைக்க வழியில்லாத காரணத்தால்!*

நன்மாறன் — சென்னை

(?) கடைச்சங்கம் எப்போது அழிந்தது?

கி. பி. 235ல் *அழிந்தது என்பர் புலவர்.*

அழ. கருப்பையா, வித்வான் மேலைச்சிவபுரி.

(?) "கொள்கை வளருது கோபுரம் போல்" என்பதை விளக்குக.

*புயல் போலப் பேசினான் என்றால், புயல் பேசுமா? என்று கேட்கக்கூடாது என்று முதலில் பதில் கூறியிருக்கிறோம். புயலின் வேகத்தைக் குறிப்பது போலவே, கோபுரத்தின் உயரத்தைக் குறிக்கும் இது,*

அன்புச் செல்வம்—தென்காசி.

(?) இந்த உலகம் எப்போது அழியும்?

*கவலைப்படவேண்டாம்—அது அழிவதை நாம் காணப் போவதில்லை.*

ம. கோவில்பிள்ளை-மேட்டுப்பட்டி

(?) கோயில்களில் நிர்வாணமாகக் காட்சி அளிக்கும் சிலைகளை, ஏன் முன்னோர் செதுக்கி வைத்துள்ளார்கள்!

*புராண ஆபாசங்களை உருவகப் படுத்தியிருக்கிறார்கள்—அவ்வளவுதான்.*

(?) நாட்டில் பிச்சைக்காரர் ஒழிய இந்த அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?

*செல்வம், தேங்கிக் கிடக்கும் களஞ்சியங்களை உடைத்து, தெருவில் ஏங்கிக் கிடக்கும் மக்களுக்கு வாழ்வு அளிக்கலாம்; இது நம்போன்றோர் சொல்லும் யோசனை—ஆனால் அரசாங்கமோ, பிச்சைக்காரர்களை ஒழிக்க வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை நடத்திக் கொண்டிருக்கிறது,*

லீலா-சித்தார்த்தனம். தூத்துக்குடி

(?) நிலவும் மேகமும் ஒன்றையொன்று தழுவுவதை எதற்கு ஒப்பிடலாம்?

*தழுவுதலில் இன்பம் உண்டென்பர்; அறிவீர்! ஆனால் நிலவும் மேகமும் தழுவினால் இருள் தோன்றும்; அதனையும் அறிவீர்! எதற்கு ஒப்பிடலாமெனிலோ: எழுத்தாளர்கள் காதலன் காதலியர்க்கே ஒப்பிடுவர் என்க!*

வி. முத்துசாமி—மணலூர்.

(?) அய்யா — எழுத்தாணியாரே! நீர் ஒரு ஊருக்குப் போகும் போது முன்னால் ஒரு ஆறு குறுக்கிடுகிறது. எதிரே ஒரு சிங்கம் வருகிறது—பின்னால் ஒரு புலி உறுமுகிறது-தண்ணீரில் ஒரு முதலை வாய் பிளந்து நிற்கிறது—மேலே மரக்கிளையில் ஒரு மலைப்பாம்பு உம்மை நோக்குகிறது-அப்போது என்ன செய்வீர்?

*என்ன செய்வேன்; "ஆகா! ஒரு கதைக்கு சரியான "கிளைமேக்ஸ்" சீன் ஐடியா கிடைத்து விட்டது என்று மகிழ்ச்சி அடைவேன். ஆனால் ஒன்று; முத்துசாமியாரே! நீர் குறிப்பிடும் எதிர்ப்புகள் அனைத்தும் தி. மு. கவைச் சூழ்ந்திருக்கும் எதிர்ப்புக்களேயாகும்.*

*ஆறு—அழுக்காறு!*

*சிங்கம்—எதிர்கட்சி ஏதிகள் செய்யும் அசிங்கம்!*

*முதலை—கல்வி ஓடையில்!*

*புலி—அரசியல் காட்டில்!*

*பாம்பு—சமுதாய பொருளாதாரப் பாதையில்!*

சு. வரதராசன்.— இனிப்பிரியாள் வட்டம்

(?) பொங்கலன்று, சாணத்தால் பிள்ளையார் வைக்க வேண்டியது அவசியமா?

*பொங்கலையும் ஆரியப் பண்டிகையாக ஆக்கிவிட முயலும் சங்கராந்திகளின் சதி அது!—சாணிப்பிள்ளையார் தேவையில்லை*

சின்னதுரை—மதுரை

(!) பொங்கல் மலர், இரண்டு ரூபாய் விலை என்கிறீர்களே—அதிகமல்லவா அது!

*உண்மைதான்! "அவாள்" ஏடுகளுடன் போட்டி போட வேண்டும் நம் ஏடு என்று ஆசைப்படுகிறீர்களே; அந்த ஆசையும் அதிகம் தானே! தோழரே! இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் ஒரு ரூபாய் விலைகளில் ஒருவரே எழுதும் புத்தகங்களை வாங்கும்போது பல மேதைகளும் தரும் சருத்தோவியத் தொகுப்பு ஒன்றை அதிக பக்கங்களில், அழகான முறையில் பெறுவது என்பது சாத்யமில்லை என்று கருதுகிறீர்கள்?*


## ★ முரசொலி ★

★

## பொங்கல் மலர்

★

★ "தை முதல்நாள் என்றுவரும் என்று வரும் என எதிர்பார்த்து நிற்கிறோம் -- கரும்புடனும், கட்டி வெல்லமுடனும்—முரசொலி பொங்கல் மலரும் வருமல்லவா! எனவேதான் அந்நாளைப் பொன்னாளாகக் கருதுகிறோம்" என்ற கடிதங்கள் குவிகின்றன.

★ சிறிதும் ஏமாற்ற மளிக்காத வகையிலே மலர் வெளிவர எல்லா ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

★ அறிஞர் அண்ணா, அவர்களின் அழகு தமிழ் ஓவியம்—

★ தமிழ் மேதைகளின் கவிதைகள்—கட்டுரைகள் - கதைகள் —

★ மு. கருணாநிதி எழுதும் ஐம்பது பக்கம் கொண்ட சரித்திர நாடகம்—

★ கவிஞர் சுரதாவின் நீண்ட கவிதை—இத்தனையும் உண்டு! அத்தனையும் கற்கண்டு!

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**விலை 2 ரூபாய்**